ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය්


11.06.2014 - மலர் 11, இதழ் 15

2014

FIFA WORLD CUP Brasil

## இடம்பெயர்ந்த இராசதானிகள்

## உலகக் கிண்ண கால்பந்தாட்டம்...



## மலசலத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் நிகழ்ந்த யுத்தங்கள்

கி.மு 1200 முதல் உலகில் பிரதான யுத்தங்கள் பல இடம்பெற்றதற்கான சான்றுகள் உள்ளன. ஆரம்ப காலங்களில் கிரேக்கரும், உரோமானியர்களும் பல மோதல்களில் ஈடுபட்டனர். அவ்வாறே, எகிப்தும் பல மோதல்களில் ஈடுபட்ட நாடாகும். சிலுவைப் போரும் அதற்குப் பின்னரான ஐரோப்பாவில் இடம்பெற்ற யுத்தங்களும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. ஒரு சில யுத்தங்கள் நூறாண்டுகளுக்கு மேற்பட்ட காலம் வரை இடம்பெற்றன.

அம்பு, வேல் கொண்டு ஆரம்பித்த யுத்தங்கள் காலக்கிரமத்தில் துப்பாக்கிகள், பீரங்கிகள் பயன்பாடு கொண்டதாக மாறின. இதனால், யுத்தங்களுக்கான கால எல்லையும் வெகுவாகக் குறைவடைந்தது. தற்போதுள்ள முன்னேறிய தொழில்நுட்ப ஆற்றல்கள் காரணமாக யுத்தங்களும் வித்தியாசமான அணுகுமுறையைக் கொண்டுள்ளன.



### கி.மு.1200
**ட்ரோயின் மோதல்**
கிரேக்கர்களால் ட்ரோய் நகரைக் கைப்பற்றவென மேற்கொள்ளப்பட்ட போராகும். இது கிரேக்க புனை கதைக்குரியதாக உள்ளது.



### கி.மு.480
**தர்மோபோலெ்யி போர்**
முதலாவது லியனிடோஸ் தலைமைத்துவத்தைக் கொண்ட ஸ்பார்ட்டர்கள் 300 பேர் பேர்சிலியன் படையினருடன் போரிட்ட பிரபல்யமான யுத்தமாகும்.



### கி.மு.331
**கோகமிலா போர்**
கிரேக்கத்தின் மகா அலெக்சாண்டர் மன்னரும் பேர்சிலியாவின் மூன்றாவது டரியசு மன்னருக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தமாகும். இந்த யுத்தத்தின் பின்னர் பேர்சியன் பேரரசு வீழ்ச்சி அடைந்தது.



### கி.மு.216
**காணே போர்**
அப்புலியாவில் உரோமப் படையினரை தோற்கடித்து ஹனிபல் வென்ற யுத்தமே இது. இரண்டாவது கார்த்தேஜு யுத்தத்தின் பிரதான சந்தர்ப்பமாகவும் இந்த யுத்தம் கருதப்படுகின்றது.



### கி.மு.197
**சைனோசொப்பலே யுத்தம்**
மசிடோனியா படைகளுக்கு எதிராக ரோமில் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தினால் ரோம் ஆக்கிரமிக்கப்பட்டது.





### கி.மு. 48
**பார்சலூஸ் மோதல்**
ரோம் நகரைக் கைப்பற்றும் ஜூலியஸ் சீசரின் யுத்தத்தின் முக்கியமான திருப்புமுனையாக இந்த யுத்தம் கருதப்படுகின்றது. சீசரின் படை ஜீனியஸ் பொம்ப்பியஸ் மக்னஸ் என்பவரை தோற்கடித்தது.



### கி.மு. 31
**அக்ட்டியம் போர்**
ரோம்க்கு எதிராக மாக் அந்தனியும் கிளியோபட்ராவும் இணைந்து மேற்கொண்ட போர். இருவரும் இந்த யுத்தத்தில் கொல்லப்பட்டனர்.

### கி.பி. 1066
**ஹஸ்ட்டின்க்ஸ் போர்**
நோர்மண்டியில் இரண்டாவது வில்லியமின் கீழ் இருந்த பிரான்சிய நோமன் படையினரும், இரண்டாவது ஹரல்ட் மன்னனின் அங்க்லோ சக்சனின் கீழ் இருந்த ஆங்கிலப் படையினரும் இந்த யுத்தத்தில் ஈடுபட்டனர். இதில் நோமன்கள் வெற்றி அடைந்தனர்.





### கி.பி. 1099
**ஜெருசலம் யுத்தம்**
கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நடைபெற்ற முதலாவது சிலுவைப் போரில் ஜெருசலம் நகரைக் கைப்பற்ற மேற்கொண்ட யுத்தமாகும். 200 ஆண்டுகள் இரு தரப்பினருக்கும் இடையில் இந்த யுத்தம் தொடர்ந்தது.



### கி.பி. 1337-1453
**நூற்றாண்டு யுத்தம்**
ஐரோப்பாவில் 116 ஆண்டுகள் இங்கிலாந்துக்கும், பிரான்ஸுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தமாக இது கருதப்படுகின்றது. பிரான்சிய சிம்மாசனத்தை தம்வசம் வைத்துக்கொள்வது இங்கிலாந்தின் நோக்கமாகும். இதில் பிரான்ஸ் வெற்றி அடைந்தது.



### கி.பி. 1775-1783
**அமெரிக்கப் புரட்சி**
வட அமெரிக்காவில் இருந்த 13 காலனித்துவ நாடுகள் இணைந்து பிரித்தானியாவுக்கு எதிராக ஆரம்பித்த யுத்தமே இது.
அமெரிக்கா இந்த யுத்தத்தில் வென்றது. ஐக்கிய அமெரிக்கா என்ற நாடு இந்த யுத்தத்தின் பின்னர் திறுவப்பட்டது.



### கி.பி. 1815
**வோர்ட்டர்லூ யுத்தம்**
வெலிங்டன் மன்னர் ஏழு குழுக்களுடன் இணைந்து தாக்குதல் நடத்தி பெல்ஜியத்தின் வோட்டர்லூவில் நெப்போலியன் பொனபாட்டின் படையினரைத் தோற்கடித்த யுத்தமே இது.



### கி.பி.1914-18
**முதலாவது உலக மகா யுத்தம்**
அவுஸ்திரேலியாவின் முடிக்குரிய இளவரசன் பிரான்ஸ் பர்டினான்ட் மற்றும் அவரது மனைவி ஆகியோர் பொஸ்னியா சரஜிவோவில் சுட்டுக் கொல்லப்பட்டதால் இந்த யுத்தம் ஆரம்பமானது. இதுவரை நிகழ்ந்த யுத்தங்களில் மிகவும் மோசமானதாக இது கருதப்படுகின்றது.



### கி.பி.1939-45
**இரண்டாவது உலக மகா யுத்தம்**
ஜேர்மனின் அடல்ப் ஹிட்லர், போலந்தை ஆக்கிரமித்ததினால் ஆரம்பித்த யுத்தம் ஆசியாவிலும் பரவத் தொடங்கியது. ஹிட்லரின் மரணம் மற்றும் அமெரிக்கா ஜப்பானில் வீசிய அணுகுண்டு வெடிப்பு என்பனவற்றுடன் யுத்தம் நிறைவடைந்தது.





### கி.பி. 1950-1953
**வடகொரியா, தென்கொரியா யுத்தம்**
அமெரிக்காவினதும் மேற்கத்தேய நாடுகளினதும் ஆதரவினைப் பெற்ற தென்கொரியாவும், சீனாவினதும் ரஷ்யாவினதும் ஆதரவினைப் பெற்ற வட கொரியாவும் மேற்கொண்ட யுத்தம் இது.



### கி.பி. 1955-1975
**வியட்நாம் யுத்தம்**
அமெரிக்கப் படையினருக்கும் வியட்நாமுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தமாகும். இதன்பின் வட வியட்நாம், தென் வியட்நாம் என்று நாடு பிரிந்தது. இந்த யுத்தத்தில் 60,000 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.



### கி.பி. 1992-1995
**பொஸ்னியா யுத்தம்**
பொஸ்னியா, யூகோஸ்லாவியாவில் இருந்து பிரிவதற்காக இடம்பெற்ற யுத்தமாகும். இதில் சுமார் ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டனர். மக்களை திட்டமிட்டு படுகொலை செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.




### கி.பி. 2001-
**ஆப்கானிஸ்தான் யுத்தம்**
அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின் மீது அல்குவைதா தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் ஆப்கானிஸ்தானை ஆக்கரமிக்கவென அமெரிக்கா ஆரம்பித்த யுத்தம்.



## யுத்த ஆயுதங்களின் பிரவேசம்

### மில்லியன் 1.6
கற்காலத்தின் ஆரம்பப் பகுதியில் ஆபிரிக்காவில் வசித்து வந்த பழங்குடி மக்கள் நன்கு தீட்டப்பட்ட கல்லால் உருவாக்கப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தினர்.



### கி.மு.3000
பித்தளை கண்டுபிடிக்கப்பட்டதுடன், ஈட்டி மற்றும் வாள் போன்ற ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டன. கிபி 1000 மாம் ஆண்டில் இரும்புக்கு ஆயுதங்கள் மாற்றப்பட்டன.



### ஆண்டுகள் 65,000
கற்காலத்தின் நடுப் பாகத்தில் வாழ்ந்த மக்கள் எலும்புகளால் உருவாக்கப்பட்ட அம்பு வில்லைப் பயன்படுத்தினர்.





### கி.பி.1259
மூங்கில் குழாய்களில் வெடி மருந்துகள் நிரப்பி தயாரிக்கப்பட்ட முதலாவது துப்பாக்கி சீனாவில் அறிமுகம் செய்யப்பட்டது.

### கி.பி.1775
அமெரிக்கப் புரட்சியின்போது பயன்படுத்தவென துப்பாக்கி உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.





### கி.பி.1450
திருகக்கூடிய முதலாவது கைத்துப்பாக்கியான 'மெச்சொக்' துப்பாக்கி அறிமுகப்படுத்தப்பட்டது.



### கி.பி. 1835
உலகில் மிகவும் பிரபல்யம் பெற்ற சிறிய கைத்துப்பாக்கி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.



### கி.பி.1862
அதிக வேக வீச்சுடன் குண்டுகளை வெளியிடக்கூடிய 'கெட்டலிங்க்' துப்பாக்கி உலகுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.




### கி.பி. 1200
முதலாவது ரைஃபிள் துப்பாக்கி அறிமுகம் செய்யப்பட்டது.



### கி.பி.1911
கோல்ட் ரக புதிய ரிவோல்வர் அறிமுகப்படுத்தப்பட்டது.



### கி.பி.1948
இஸ்ரேலியப் படையைச் சேர்ந்த உக்கெயில் கால் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஊஷி என்ற மெஷின் துப்பாக்கியே இது.



### கி.பி.1947
சோவியத் யூனியனைச் சேர்ந்த அவிட்டோவோ கலஷ்னிகோவா ஏ.கே 47 துப்பாக்கியை அறிமுகம் செய்தார்.



### கி.பி.2010
25 மி.மீ கிரேனட் வீச்சு உபகரணமாகப் பயன்படும் துப்பாக்கி அறிமுகப்படுத்தப்பட்டது.





### கி.பி.2009
மின் அலைகளை வெளியேற்றும் X5 துப்பாக்கி அறிமுகமானது.

### கி.பி. 1933
எம் 2 பிரவுன்நினிங் மெஷின் துப்பாக்கி அறிமுகமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk

# உலகின் மிகவும் பெரிய பாம்பு



## இராட்சத அனகொண்டாவைவிட இந்த பாம்பு பெரியதாம்....

கொலம்பியாவின் செரெஜோன் நிலக்கரி சுரங்கத்தினைச் சேர்ந்த பணியாளர்கள் வழமை போல் அன்று தமது பணிகளை ஆரம்பித்தனர். இயந்திரங்களைப் பயன்படுத்தி மண்ணை அப்புறப்படுத்தி அகழ்வுப் பணிகளை ஆரம்பித்த போது, திடீரென நிலத்தில் இருந்து ஏதோவொன்று வெளிவர ஆரம்பித்தது. இதனை அடுத்து அகழ்வுப் பணிகள் கைவிடப்பட்டன. அந்த பணியாளர்கள் இராட்சத எலும்புத் தொகுதி எச்சங்களையே அவ்வாறு கண்டுள்ளனர்.

தொல்பொருள் ஆய்வு அறிஞர்கள் துரிதகதியில் செரெஜோன் நிலக்கரி சுரங்கத்திற்கு அழைக்கப்பட்டனர். கவனமாக மண் அகற்றப்பட்டு எலும்புகளை பெற்றுக்கொண்ட அகழ்வாராய்ச்சியாளர்கள், அந்த எலும்புத் தொகுதி இராட்சதப் பாம்புக்குரியது என்பதைக் கண்டறிந்தனர். இந்த இராட்சதப் பாம்பின் அருகாமையில் அதனால் காவு கொள்ளப்பட்ட உயிரினங்களின் எலும்புகளின் எச்சங்களும் காணப்பட்டன. முதலைகள் மற்றும் இதர பெரிய விலங்குகள் அதன் இரையாகியுள்ளன.


இந்த இராட்சதப் பாம்பு ஓர் பஸ்ஸின் அளவுக்கு பெரியது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த பாம்பு மலைப் பாம்பினைப் போன்றதாகும்.

சுமார் 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு செரஜோன் நிலக்கரி சுரங்கம் உள்ள பகுதியானது, வளம் மிக்க சதுப்பு நிலமாக இருந்துள்ளது என்று தொல்லியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். விஞ்ஞானிகளுக்கு கிடைத்த எச்சங்களின்படி இந்த பாம்பு 730 கிலோகிராம் நிறையைக் கொண்டதாக இருந்திருக்கும் என்று கருதப்படுகின்றது. நாசி நுனியில் இருந்து வாலின் நுனிவரை 13 மீற்றர் நீளம் கொண்டது. (அதாவது 42.7 அடி) செரஜோன் நிலக்கரி அகழ்வுப் பகுதியில் இந்த பாம்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதனால் இந்த பாம்பினை 'டைட்டன் போவா செரெஜோனிஸ்' என்று அழைக்கின்றனர்.

''இராட்சதப் பாம்புகள் குறித்து நாம் அனைவருமே அக்கறை கொண்டிருக்கின்றோம். இதனால்தான் இராட்சதப் பாம்புகளைப் பயன்படுத்தி ஹொலிவூட் திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால், இந்த பாம்பு உண்மையானது. ஹொலிவூட் மாயம் எதுவும் இதில் இல்லை. அனகொண்டா திரைப்படத்தில் ஜெனிபர் லோப்பசை விரட்டிச் செல்லும் இராட்சத அனகொண்டாவை விட இந்த பாம்பு மிகவும் பெரியதாகும்'' என்று பாம்பின் எலும்புகளை ஆராய வந்த அமெரிக்காவின் புளோரிடா பல்கலைக்கழகத்தின் புதைபொருள் ஆய்வாளர் ஜொதைன் புளொக் குறிப்பிட்டார்.

கடந்த பல வருடங்களாக விஞ்ஞானிகள் பாம்பின் எதிர்கால பரிணாம வளர்ச்சி குறித்து வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டு வந்தனர். பாம்புகள் தொடர்பான விசேட ஆய்வாளரான நியூயோர்க் நகர கொனெல் பல்கலைக்கழகத்தின் ஹெகீரன் குறிப்பிடுகையில், பாம்பின் அதிகப்பட்ச நீளம் 40 அடியாக இருக்கும் என்கிறார். ஆனால், இந்த புதிய கண்டுபிடிப்பினூடாக இந்த கருத்துக்கள் வலுவற்றதாகிவிட்டன என்றே கூற முடியும். (இ)

## பாம்பின் அரசன் கண்டுபிடிப்பு




# இதனால் இப்படி...



✱ மலை உச்சியிலிருந்து சத்தமிட்டால் அந்த ஒலி அப்படியே ஏன் திரும்பிக் கேட்கின்றது?

**விளக்கம்:** மலை உச்சியிலும், வேறு உயரமான இடங்களிலும் தடைகள் ஏதும் இருப்பதில்லை. இடையூறுகளும் இருக்க மாட்டாது. நாம் சத்தம் எழுப்பும்போது அந்த சத்தத்தினை உறிஞ்சிக்கொள்ள எதுவும் இல்லாததால் திரும்ப அந்த சத்தம் எதிரொலிக்கின்றது. அந்த வகையில் சத்தம் நேரே பயணித்து முன்னால் உள்ள மலைகளில் மோதி எதிரொலிக்கின்றது. இதுவே எமக்கு எதிரொலியாக கேட்கின்றது.



✱ காற்று வீசும்போது குளிர்வது ஏன்?

**விளக்கம்:** வியர்வையில் உள்ள நீர், காற்றின் மூலம் உடலின் மேற்பகுதியில் நீராவியாகி வெளியேறி விடுகின்றது. எந்தவொரு பொருளையும் நீராவியாக்கும் வெப்பம் எம்மைச் சூழவுள்ள சுற்றாடலில் கிடைக்கின்றது. வியர்வையை நீராவியாக்குவதற்குத் தேவையான வெப்பத்தினை அதிகளவு உறிஞ்சுக்கொள்வது அதிக வெப்பம் உள்ள எமது உடல் என்பதால் வியர்வை குறையும்போது குளிர்மை உணர்வு ஏற்படுகின்றது.

மேலும் வியர்வையில் உள்ள நீர், சருமத்தின் மேற்பரப்பில் நீராவியாகி முழுமையாக சருமத்தில் தங்கிவிடுகின்றது. இதனால், மேலதிக நீர் நீராவியாவது தடுக்கப்படுகின்றது. ஆனால், காற்று வீசும்போது சருமத்தின் அருகாமையில் உள்ள மேற்கூறப்பட்ட நீராவிப் பகுதி அப்புறப்படுத்தப்பட்டு அவ்விடத்தில் உலர்வான காற்று வருவதனால் உடலின் மேலதிக வெப்பம் அகன்று உடல் குளிர்மை அடைகின்றது.

விசேட தபால் மூல புலமைப் பரீட்சை வழிகாட்டி
ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பலமை பரிசில் பரீட்சைக்கான எதிர்பார்கை வினா விடை பத்திரங்கள் விற்பனைக்கு உண்டு.
காசுக்கட்டலை (M.O) or வங்கியினூடாக செலுத்தியும் பெறமுடியும்
விபரங்களுக்கு: 071-7628238 / 077-8881054

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரும்பிய பரிசு



ஓர் ஊரில் தையற்காரர் ஒருவர் இருந்தார். அவர் அதிகம் படிக்காதவர். ஆனால், கேள்வி ஞானத்திலும் இறை அன்பிலும் சிறந்தவராக விளங்கினார். ஆகவே, அவ்வூர் மக்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவரிடம் சென்று நியாயமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதுடன், மன அமைதியும் பெற்றுச்சென்றனர். அதற்கமைய, அவருடைய சொல்லும் செயலும் ஞானம் நிரம்பியதாக இருக்கும். இதனால், அவருடைய புகழ் எங்கும் பரவியது. இதைக்கேள்வியுற்ற அவ்வூர் அரசர் அவரைத் தன் அரண்மனைக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். அங்கு அவருக்குச் சிறப்பான வரவேற்புக் கொடுத்து அவரைச் சிறப்பிக்க விரும்பினார்.

அரசரின் விருப்பத்திற்கிணங்கி அவரும் அரண்மனைக்குச் சென்றார். அங்கு அரசர், அவரது தொழிலைக் குறிக்கும் விதமாகத் தங்கத்தில் செய்து, வைரம், முத்துக்கள் பதித்த கத்தரிக்கோல் ஒன்றை அவருக்குப் பரிசாக அளித்தார். தையற்காரரோ அந்தப் பரிசை ஏற்க மறுத்துவிட்டார்.

வியப்படைந்த அரசர், "ஐயா, இது மிகவும் விலையுயர்ந்த பரிசு. இதை ஏன் ஏற்க மறுக்கிறீர்கள்? இதைவிட மேலான பரிசு வேறு ஏதாவது வேண்டுமா?அப்படியானால் அது என்னவென்று எனக்குச் சொல்லுங்கள். உடனே அதை உங்களுக்கு வழங்க உரிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்றார்.

தையற்காரரோ..., "ஆம் அரசே! எனக்கு இந்தக் கத்தரிக்கோல் வேண்டாம். ஒரு சிறிய ஊசியை எனக்குப் பரிசாக அளியுங்கள். அதுவே நான் விரும்பும் பரிசு" என்றார். மன்னருக்கோ ஆச்சரியம் தாளவில்லை.

"அறிவில் சிறந்தவரே! உமது விருப்பம் மிகவும் புதுமையாக உள்ளதே! விலைமதிப்பற்ற இந்தத் தங்கக் கத்தரிக்கோலைவிட நீங்கள் கேட்கும் ஊசி எந்த விதத்தில் உயர்ந்தது?" என்று கேட்டார்.

"மன்னா! தாங்கள் தர விரும்பும் கத்தரிக்கோல் விலைமதிப்பற்றதுதான். ஆனால், அதன் பணி வெட்டுவதே. ஆனால், ஊசியோ வெட்டுண்டதை இணைத்து ஒன்று சேர்த்திடும் உயர்ந்த பணியைச் செய்கின்றது. நான் வெட்டுவதை அல்ல; இணைப்பதை மட்டுமே விரும்புபவன்" என்றார். இதைக்கேட்ட அரசர், அவர் விரும்பிய பரிசை வழங்கியதுடன், புதியதோர் செய்தியை உணர்ந்துகொண்ட மகிழ்ச்சியில் திளைத்தார்.



## தெனாலிராமன் கதைகள்

# சமபங்கு

ஒருநாள் கிருஷ்ணதேவ ராயர், அரண்மனையில் கிருஷ்ண லீலா நாடக நாட்டியம் ஒன்று நடைபெற ஏற்பாடுகளைச் செய்திருந் தார். தெனாலிராமனைத் தவிர, ஏனைய அனைத்து பிரமுகர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தார். இந்நிகழ்ச்சி யில் அரசியும் மற்றும் சில பெண்களும் கலந்து கொள்வ தால், தெனாலிராமன் இருந் தால் ஏதாவது கோமாளித்த னம் செய்து நிகழ்ச்சியை நடைபெறாவண்ணம் தடுத்துவிடு வான் என மன்னர் எண்ணினார். தெனாலிராமனை மட்டும் நாடக அரங்கினுள் விட வேண்டாமென்று வாயிற்காப்போனிடம் கண்டிப்புடன் மன்னர் சொல்லிவிட்டார். இதனை அறிந்த தெனாலிராமன், எப்படியா வது அரங்கத்தினுள் சென்று விடுவது என தீர்மானித்துக்கொண்டான்.

நாடகம் நடைபெறும், அரங்கின் வாயிலை நெருங்கி, உள்ளே செல்ல தெனாலிராமன் முற்பட்டான். ஆனால், வாயிற்காப்பான் அவனை உள்ளே விட மறுத்துவிட்டான். சிறிது சிந்தித்த தெனாலிராமன் ஒரு தந்திரம் செய்தான். "ஐயா, என்னை உள்ளே விட்டால், என்னுடைய திறமை யால் ஏராளமான பரிசுகள் எனக்குக் கிடைக்கும். அதில் பாதியை உனக்குத் தருகிறேன்" என்றான். இதைக்கேட்ட வாயிற்காப்போன் முதலில் சம்மதிக்கா விட்டாலும் பின்னர் கிடைப்பதில் பாதிப் பரிசு கிடைக்கிறதே என்று மகிழ்ச்சி அடைந்து அவனை உள்ளே விட்டான்.

அரங்கத்தினுள் செல்ல வேண்டுமா னால், மீண்டும் இன்னொரு வாயிற் காப்போனை சமாளிக்க வேண்டியிருந் தது. அவனும் தெனாலிராமனை உள்ளே விட மறுத்தான். முதல் வாயிற்காப் போனிடம் கூறியதையே இவ னிடமும் கூறினான். அவனும் பாதிப் பரிசு கிடைக்கிறதே என்று மகிழ்ந்து அவனை உள்ளே விட்டுவிட்டான்.

அப்போது கிருஷ்ணனாக நடித்தவன் வெண்ணெய் திருடி கோபிகைகளிடம் அடி வாங்கும் காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. உடனே, அங்கிருந்த தெனாலிராமன் பெண் வேடம் அணிந்து மேடையில் தோன்றி, கிருஷ் ணன் வேடம் போட்டு நடித்தவனை கழியால் நையப் புடைத்துவிட்டான். கிருஷ்ண வேடதாரி வலி பொறுக்க மாட்டாமல் அலறினான்.

இதைப்பார்த்த மன்னர் கடுங்கோப முற்று மேடையில் பெண் வேடமிட் டுள்ள தெனாலிராமனை அழைத்து வரச்செய்தார். பின் "ஏன் இவ்வாறு செய்தாய்?" என கோபத்துடன் வின வினார். அதற்குத் தெனாலிராமன், "கிருஷ்ணன் கோபிகைகளிடம் எத்தனையோ முறை அடிபட்டிருக் கின்றார். ஆனால், இப்படியா அவர் அலறினார்" என்று கேட்டான். இதைக்கேட்ட மன்னருக்கு அடங் காக் கோபம் ஏற்பட்டது. தெனாலிரா மனுக்கு 30 கசையடிகள் கொடுக்கு மாறு தன் பணியாளர்களுக்கு உத்தரவிட்டார்.

இதைக்கேட்ட தெனாலிராமன், "அரசே இப்பரிசை எனக்குக் கொடுக்க வேண்டாம். ஏனென் றால், எனக்கு கிடைக்கும் பரிசை ஆளுக்குப் பாதி பாதியாகத் தருவ தாக நம் இரண்டு வாயிற் காப்போன்களிடம் உறுதி யளித்து விட்டேன். ஆகையால், இப்பரி சினை அவர்கள் இருவ ருக்கும் சமமமாகப் பகிர்ந்து கொடுத்துவிடுங்கள்" என்று கேட்டுக்கொண்டான். உடனே மன்னர் அவ்விரு வாயிற்காப் போன்களையும் அழைத்து வரச் செய்து இதுகுறித்து விசாரித்தார். அவ்விருவரும் உண்மையை ஒத்துக்கொண்டார்கள். இதனால், அவ்விருவருக்கும் தலா 15 கசையடிகள் கொடுக்கு மாறு மன்னர் பணித்தார். தெனாலிராமனின் தந்திரமான செயல் கண்டு தனக்குள் சிரித்தும் கொண்டார்.



# அவமதிப்பு

ஓர் எறும்பு தனது சுறுசுறுப்பான நடையை நினைத்து, நினைத்து எப்போதும் கர்வத்துடன் சுற்றி வந்தது. ஒருமுறை அது உணவைத் தேடிச் செல்லும் வழியில், புழு ஒன்று நகரமுடியாமல் சுருண்டு கிடப்பதைப் பார்த்தது.

அந்தப் புழுவைப் பார்த்த எறும்பு, "இதோ பார் புழுவே... நான் எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கின்றேன். நீ இப்படி சுருண்டு கிடக்கின்றாயே... இவ்வாறு சோம்பேறியாக உடம்பை வளர்த்து என்ன செய்யப் போகின்றாய்? இதெல் லாம் நல்லதிற்கில்லை. எல்லாம் நேரம்தான்" என்று கேலியா கப் பேசிச்சென்றது. சில நாட்கள் சென்றன. அதே வழியாகத் திரும்பவும் அந்த எறும்பு வந்தது. அப்போது பழைய புழு வைப் பார்த்துக் கேலி செய்ய வேண்டும் என்ற எண்ணத் துடன் அதைத் தேடியது.



அப்போது அங்கே ஓர் அழகிய வண் ணத்துப்பூச்சி அங்கும் இங்கும் படபட வென்று சிறகை அடித்துக் கொண்டு பறந்து கொண்டிருந்தது.

ஒன்றும் புரியாமல் விழித்த எறும்பைப் பார்த்த வண்ணத்துப்பூச்சி, "எறும்பே! எப்போதும் நீ தரையில் ஊர்ந்து கொண்டிருக்கிறாய். நான் ஒரு சமயத்தில் புழுவாகச் சுருண்டு கிடந்தாலும் இப்போது முழு வளர்ச்சி பெற்று வண்ணத்துப்பூச்சியாக அழகாகப் பறந்து கொண்டிருக்கிறேன். இப்போது பார் எனது சுறுசுறுப்பை. எல்லாம் நேரம்தான்" என்று சொல்லிவிட்டுப் பறந்தது.

"இன்று ஒருவனை நீ துரும்பாக நினைத்து அவமதித்தால், பிற்காலத்தில் நீ அவன் மூலமாகவே அவமதிக்கப்படுவாய்" என்று அசரீரியாக ஒரு குரல் எறும்பின் காதுகளுக்குக் கேட்டது. தன் தவறை உணர்ந்து தன்வழியே சென்றது எறும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலசலத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்

பார்த்த மாத்திரத்தில் சாதாரண ஒரு மோட்டார் சைக்கிளை போல் தோற்றம் அளித்தாலும் இதில் ஓர் விசேட அம்சம் ஏனைய மோட்டார் சைக்கிள்களில் இருந்து இதனை வேறுபடுத்திக் காட்டுகிறது. அதாவது இந்த மோட்டார் சைக்கிள் எதனையுமே கழிவாக வெளியேற்றுவதில்லை. இந்த மோட்டார் சைக்கிளானது, மனிதனின் மலசலத்தின் மூலம் சக்தியைப் பெறும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளமையே அதற்கு சிறந்த உதாரணமாகும்.

கேட்கவும் பார்க்கவும் வியப்பூட்டும் இந்த அபூர்வ மோட்டார் சைக்கிளை ஜப்பானின் புகழ்வாய்ந்த கழிவறை உபகரணங்களை தயாரிக்கும் டோட்டோ நிறுவனம் தயாரித்துள்ளது. டொய்லட் பைக் நியோ (Toilet Bike Niyo) என அழைக்கப்படும் இந்த மோட்டார் சைக்கிளில் நவீனமயப்படுத்தப் பட்ட கழிவறையும் நடமாடும் இரசாயனக் கூடமும் உள்ளது.

இந்த மோட்டார் சைக்கிளை செலுத்துபவர் அதனை ஓட்டும்போது இடைநடுவில்






'டோட்டோ நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள இந்த சுற்றுலா மலசலகூடமானது மணிக்கு 50 மைல் வேகத்தில் ஓடக்கூடியது'

கழிவறையைப் பயன்படுத்தும்படி அறிவுரைகள் கிடைக்கும். அதற்குக் காரணம் ஓட்டுநரின் மலசலத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் உயிர்ச்சுவட்டு எரிபொருள்ளில் இருந்தே மோட்டார் சைக்கிள் ஓடுவதற்கான எரிபொருள் கிடைக்கின்றமையாகும்.

டோட்டோ நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த சுற்றுலா மலசலகூடமானது மணிக்கு 50 மைல் வேகத்தில் ஓடக்கூடியது. அத்தோடு, எதிர்வரும் 6 வருட காலத்திற்குள் வளியில் காபனீரொட்சைட்டின் வெளியேற்றத்தை 50 வீதமாகக் குறைக்கும் திறன் இந்த மோட்டார் சைக்கிளுக்கு இருப்பதாக டோட்டோ சைக்கிள் நிறுவனம் தெரிவிக்கின்றது. மூன்று சக்கரங்களைக் கொண்ட இந்த அற்புத மோட்டார் சைக்கிள், இதுவரை ஜப்பான் முழுவதும் சுமார் 600 கி.மீற்றர் தூரம் பயணித்துள்ளது.

இரஞ்சித் ஜெயகர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூமியில் உள்ள விந்தைமிகு பகுதிகள்

**இயற்கை உலகம் விந்தையானது. வியப்பூட்டும் விடயங்கள் பலவற்றை இந்த உலகம் சுமந்து கொண்டிருக்கின்றது. உலகின் பாலைவனங்கள், பனித்தட்டு மலைகள், வனாந்தரங்கள், ஆறுகள் சார்ந்த பகுதிகளில் மற்றும் மேலும் பல இயற்கை சுற்றாடல் தொகுதிகளில் இந்த விந்தைகளைக் காணமுடியும். இந்த வியப்பூட்டும் இயற்கையின் அருங்கொடைகள் சிலவற்றைப் பற்றி இங்கு பார்ப்போம்.**

## பிளிட்வைஸ் தேசிய பூங்கா



அழகிய ஏரிகள், குகைகள், வனாந்தரங்களைக்கொண்ட பிளிட்வைஸ் தேசிய பூங்கா க்ரோடியாவில் அமைந்துள்ளது. 296.85 ஹெக்டேயர் பரப்பளவுடைய பகுதியில் அமைந்துள்ள இந்த பூங்கா அங்கு அமைந்திருக்கும் மனம் கவரும் நீர்வீழ்ச்சி காரணமாக பிரபல்யம் பெற்றுத் திகழ்கின்றது.

பிளிட்வைஸ் தேசிய பூங்கா, வரலாற்று தொல்லியல் மற்றும் சுற்றாடல் ரீதியில் முக்கியத்துவம் பெற்ற இடமாகத் திகழ்கின்றது. 'ஜிபுட்' என்ற பழங்குடி மக்களின் தொட்டில் என்றும் இப்பகுதியை செல்லமாக அழைப்பர்.





பண்டைய காலத்தில் இங்கு ஆதிமனிதர்களின் வாசஸ்தலம் இருந்துள்ளது. இங்கு ஓர் அரணின் சிதைவுகள்,பித்தளை யுகத்திற்குரிய பொருட்கள், செரமிக் மட்பாண்டங்கள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அழிந்து வரும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ள சில விலங்குகளுக்கு இது அபய பூமியாகும்.

பிளிட்வைஸ் தேசிய பூங்கா உலக மரபுரிமைகளில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு காணக்கூடிய இயற்கை குகைகளில் மண், சுண்ணாம்புக் கற்கள் கரைவதனால் சேர்ந்த பூகோள திட்டுக்களைக் காண முடியும். மேலும் இங்கு சுண்ணாம்புக் கற்கள் பூகோளத் திட்டுக்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. இதனால் இதனை விந்தைமிகு உயிரியல் பூங்காவாகவும் கூறமுடியும்.

பிளிட்வைஸ் தேசிய பூங்காவில் 20 ஏரிகள் காணப்படுகின்றன. கல்சியம் காபனேற், பாசி, படர் தாவரங்கள், நீர்வாழ் பக்றீரியாக்கள் மற்றும் சுண்ணாம்புக் கற்கள் நீரில் கசிதல் என்பன இங்குள்ள குகைகளை வியப்பூட்டும் வகையில் அலங்கரித்துள்ளதனைக் காணமுடியும்.

ஜுராசிக் மற்றும் கிறிஸ்டேசிபஸ் ஆகிய காலப் பகுதிகளில் இந்த விந்தைமிகு பூங்கா உருவாகியுள்ளது. இங்குள்ள சில கல்சியம் காபனேற் படிமங்கள் 4000 மீற்றர் அடர்த்தித் தன்மையைக் கொண்டவையாகும். இங்குள்ள மாலாகொப்பெலா மலையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய 16 ஏரிகள் உள்ளன. இந்த ஏரித் தொகுதியினை மேல் கீழ் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க முடியும். மேல் ஏரி தொகுதி டொலமைட் பூங்காவாகும். அதில் அடர்வனங்கள், நீர்வீழ்ச்சிகள் பல உள்ளன. கீழ் ஏரியா தொகுதி சிறிய மற்றும் ஆழமற்ற ஏரிகளினாலும் சுண்ணாம்புக் கற் பாறைகளினாலும் உருவான பள்ளங்களினாலும் நிரம்பியுள்ளது. இங்குள்ள வனாந்தரம் சுற்றாடல் தொகுதிகள் பலவற்றின் இணைப்பாகும். இந்த பிளிட்வைஸ் தேசிய பூங்காவில் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பல்வகைமைத்துவம் மிக அதிகமாகும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மெக்சிகோவில் பளிங்குக் குகை



வட அமெரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள மெக்சிகோவில் (ச்)சிஹூவா ஹூவா மெக்சிகோ பாலைவனத்தின் தரைமட்டத்திலிருந்து 300 மீற்றர் ஆழத்தில் இந்த குகை அமைந்துள்ளது. பூமியில் உள்ள மிகப்பெரிய இயற்கை ஸ்படிக ஜிப்சம் என்ற பளிங்குக் கற்கள் இங்குள்ளமை இந்த குகையில் சிறப்பம்சமாகும். குகை முழுவதும் பலதரப்பட்டவாறு காணப்படும் இந்த ராட்சத பளிங்குத் தூண்கள் வெட்டப்பட்டு அழகுபடுத்தப்பட்டது போன்று காணப்படுகின்றது. இந்த ராட்சத தூண்கள் சில 11 மீற்றர் நீளம் கொண்டவை. அதன் சுற்றளவு 4 மீற்றராகும். நிறை 55 தொன். இந்த பளிங்குக் குகை பண்டைய கால வேறுபாடு ஒன்றை வெளிப்படுத்துகின்றது.

குகையின் அடிப்பாகத்தில் அதிகளவு வெப்பத்தைக் கொண்ட 'மெக்மா' காணப்படுகின்றது. பண்டைய காலத்தில் இங்கு நீர் நிரம்பி இருந்துள்ளது. குகையின் அடிப்பாக மெக்மா காரணமாக குகையின் உட்பாகத்தில் வெப்பநிலை 50 பாகை செல்சியசாக உள்ளது. பல வருடங்களாக இங்கு மிக அதிகமான வெப்பநிலை காணப்படுகின்றது. இதன் காரணமாகவே, இக்கனிமங்கள் உருவாகியிருக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது. பளிங்குக் குகையினுள் உயர் வெப்பநிலையும் குறைவான ஈரலிப்புத் தன்மையும் காணப்படுவதால், அந்த குகையினுள் மனிதனால் சுமார் 10 நிமிடங்கள் வரை மட்டும் தான் இருக்க முடியும்.

இங்கிருந்து பெறப்பட்ட நீர்த் துளியில் மில்லியன் கணக்கிலான பக்ற்றீரியாக்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பூமிக்கு அப்பால் உள்ள வேற்றுக்கிரகங்களின் உயிரினங்கள் தொடர்பிலான தகவல்களை அறிவதற்காக இந்த பளிங்குக் குகையின் சூழல் தன்மைகள் மற்றும் உயிரினங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. இந்த பளிங்குக் குகையுடன் தொடர்புடைய மேலும் சில குகைகள் ஆய்வுகளின்போது கண்டறியப்பட்டுள்ளன. இவையும் இயற்கையின் வியப்புமிகு ரகசியங்களைக் கொண்ட குகைகளாகவே கருதப்படுகின்றன.

# நோர்வேயின் ப்ரெய்கெஸ்டொலன்


நோர்வே நாட்டின் ரிஃபிள்க்கில் அமைந்துள்ள ப்ரெய்கெஸ்டொலன் என்ற கற்பாறையானது, க்ளாசியர் செயற்பாட்டினால் உருவாகியுள்ள ஓர் இயற்கை அதிசயமாகும். இக்கற்பான[illegible]மார் 10 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. ப்ரெய்கெஸ்டொலனின் உயரம் 604 மீற்றராகும். அத்துடன், அதன் உச்சி 25x25 அளவிலான சமபரப்பு மேடையாகக் காணப்படுகின்றது.

இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்த பாறைப்பகுதி பனியினால் மூடப்பட்டிருந்தது. கற்பாறையின் இடைவெளிகளில் இருந்த பனியின் அழுத்தம் காரணமாக பாறை பல பகுதிகளாக வெடித்தது. ப்ரெய்கெஸ்டொலனில் காணக்கிடைக்கும் பெரும் பள்ளமும் இவ்வாறு பனி அழுத்த செயற்பாட்டினால் உருவானதாகும். மலை ஏறுபவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இந்த ப்ரெய்கெஸ்டொலன் மலை மிகவும் பிரசித்தி பெற்றதாக திகழ்கின்றது.









# சோசுஸ்வ்லெய்







நமீபியாவின் பிரதான சுற்றுலா மையமான சோசுஸ்வ்லெய் நமீப் பாலைவனத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள கனிம உப்பு மற்றும் களிமண்ணைக் கொண்ட சதுப்பு நிலமாகும். கொய்(ச்)சாப் மற்றும் குய்செப் ஆறுகளுக்கிடையே 32 ஆயிரம் சதுர கி.மீற்றர் பரப்பளவு பிரதேசத்தில் காணப்படும் இந்த சோசுஸ்வ்லெய் உலகின் உயரமான செம்மண் பூமியாகக் கருதப்படுகின்றது. மென்சிவப்பு முதல் செம்மஞ்சள் வரையிலான நிறங்கள் பலவற்றைக்கொண்ட மணல் குன்றுகளை இங்கு காணலாம்.

மண்ணில் காணப்படும் அதிகபட்ச இரும்பு சதவீதமே இந்த பலவிதமான நிறங்களுக்கு காரணமாகும். இங்குள்ள மண் குன்றுகளில் கடும் சிவப்பாக உள்ள மலைக்குன்றுதான் மிகவும் பழமை வாய்ந்ததாகும். சோசுஸ்வ்லெய் அமைந்துள்ள மண் குன்றுகளில் பெரும்பாலானவை 200 மிற்றரைவிட உயரமானவை. 380 மீற்றர் உயரம் பொண்ட 'பிக் டெடி' இவற்றுள் மிகவும் உயரமானது. வளம்மிக்க பயிர்ச்செய்கைகளால் போர்த்தப்பட்டுள்ள உயரமான மலை குன்றுகளையும் இங்கு காணலாம். இவற்றுக்கான நீர், நிலத்தடி நீர் மூலாதாரங்களில் இருந்தும் ஆறுகளில் இருந்தும் கிடைக்கின்றது. பருவ மாற்றங்களுக்கு ஏற்பவும் இங்கு மழைநீர் கிடைக்கின்றது. அட்லாண்டிக் சமுத்திரத்தில் இருந்து இந்த பாலைவனத்திற்கு வரும் காற்று சுமந்து வரும் காலைப் பனியினாலும் பாலைவனத்திற்கு நீர் கிடைக்கின்றது.

வெப்பத்தினால் பாதிக்கப்பட்டாலும் இந்த சோசுஸ்வ்லெய், தாவரங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. அத்துடன், இவற்றுள் அதிகளவானவை அப்பகுதிக்கே உரிய தாவரங்களாகும். அந்த பகுதிக்குரிய காலநிலைக்கு ஏற்றவாறு அவை தகவமைக்கப்பட்டுள்ளன. சொற்பளவு நீரினால் உயிர் வாழக்கூடிய சிறிய வகை உயிரினங்களும் இங்குள்ளன. ஊர்வன, அன்டிலொப் மான்கள், தீக்கோழிகள், சிறு பூச்சிகள் என்பன இங்கு பரவலாக வசிக்கின்றன.

சோசுஸ்வ்லெய் பகுதிக்கு சில சந்தர்ப்பங்களில் அதிக மழைவீழ்ச்சி கிடைக்கும். இதனால், இங்குள்ள சதுப்பு நிலங்கள் நீரால் நிரம்பி விடுகின்றன. இந்த காலப்பகுதியில் சுற்றுலாப் பறவைகள் சிலவற்றையும் இங்கு காணமுடியும். உலர் காலத்தில் இந்த மண் குன்றுகள் முழுமையாக வெண்மணல் குன்றுகளாக மாறிவிடுகின்றன.

# அரிஸோனாவின் அலைகள்

வடஅமெரிக்காவின் அரிஸோனா மாநிலத்தில் அமைந்துள்ள வியப்பூட்டும் இயற்கைப் படைப்பாக இதனைக் கருதமுடியும். இது மிகவும் அழகிய பூகோள அமைப்பாகும். மணல் கற்கள் பாறைத்தொகுதி காற்றினாலும் நீரினாலும் கசிவதனால் இந்த 'அலைகள்' உருவாகியுள்ளன.

இந்த பாறைத்தொகுதி ஜுரொசிக் காலப்பகுதிக்குரியதாகக் கருதப்படுகின்றன. இங்கு அலை வடிவமாக தென்படுவது இரும்பாகும். பல ஆண்டுகள் காற்றினாலும் மழை நீரினாலும் ஏற்படும் எதிர்பாரா வெள்ளப்பெருக்கினால் கசிவடைந்து வெட்டி வடிவமைக்கப்பட்டது போன்ற பிரகாசிக்கும் மேற்பரப்பு இங்கு உருவாகியுள்ளது. பற்றிப்பிடித்து ஏறுவதற்கு கடினமான பரப்பு என்பதால் மலை ஏறுபவர்கள் மத்தியிலும் புகைப்படக்கலைஞர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்ற இடமாக இப்பகுதி விளங்குகின்றது.



மேலும் சில அடுத்த வாரம்....

ப்ரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - II

பெயர்: ..........................................................

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

**பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

01 **மழைக்காலத்தில் வனங்கள் செழிப்பு மிக்கவையாகக் காட்சியளிக்கும். அக்காலங்களில் மரங்கள் எல்லாம் பச்சைக் கம்பளம் போர்த்தது போல் தோன்றும். திறந்தவெளிகளில் புற்களும் பூண்டுகளும் உயர்ந்து வளர்ந்திருக்கும். குழிகளில் நீர் நிறைந்திருக்கும். ஆறு, குளம், ஏரி, நீரோடை என்பனவற்றில் மிருகங்கள் நீர் குடிக்க வருவதைக் காண்பது அரிது. மான், மரைக்கூட்டம் காட்டினுள் அலைந்து திரிவதைக் காணலாம். யானைக்கூட்டம் காட்டினுள் ஆடி அசைந்து திரிகின்றன.**

1. வனம் என்ற சொல்லுக்கு ஒத்தகருத்து சொல் இரண்டு தருக.
   .............................. ..............................
2. பந்தியிலுள்ள உவமைச் சொல் ஒன்று தருக.
   ..............................
3. இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்று தருக.
   ..............................
4. அஃறிணை, பன்மை, நிகழ்கால வினைச்சொல் ஒன்று;
   ..............................
5. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நீர்நிலைகள் எவை?
   ..............................
6. ஏன் விலங்குகள் நீர்நிலைகளை நாடி வருவது அரிது என குறிப்பிடப்பட்டுள்ளது?
   ..............................

02. **பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் அமைக்க.**

1. நீர்நிலைகளை/விலங்குகள்/நாடி/குடிக்க/வரும்/நீர்
   ..............................
2. சூரியன்/மெல்ல/கிழக்கு/மெல்ல/வானில்/தோன்றினான்
   ..............................
3. அசைந்து/ஆடின/மரங்கள்/அங்கும்/காற்றில்/இங்கும்
   ..............................

03. **பின்வரும் தொடரின் கருத்தினை விளக்குக.**

1. கண்ணும் கருத்துமாக ..............................
2. ஆடி அசைந்து ..............................
3. ஆடிப்பாடி ..............................

04 **வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்க.**

1. இந்த ஆண்டு எமது பாடசாலையின் .............................. விழா மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.
   (பறிசழிப்பு, பரிசளிப்பு, பரிசலிப்பு)
2. பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற நான் .............................. செய்ய வேண்டும்.
   (முயற்சி, முயர்ச்சி, முயற்ச்சி)
3. எனது மாமனார் விஞ்ஞான .............................. யில் ஈடுபட்டார்.
   (ஆராச்சி, ஆராட்சி, ஆராய்ச்சி)

05. **பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினை தமிழில் தருக.**


1. Please be silent ..............................
2. Let us go class room ..............................
3. Throw the key ..............................




06. **பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தினை தமிழில் எழுதுக.**

1. மம ஹொந்தின் இன்னவா ..............................
2. மே மல ர(த்)து பாடய் ..............................

07. **பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

01. மின்காந்தம் பயன்படுத்தப்படும் மின் சாதனப் பொருள்?
    1. மின்மணி 2. பாரம் தூக்கி 3. மின் அடுப்பு
02. நீண்ட நாட்கள் வாடாது இருக்கக்கூடிய பூ எது?
    1. கொடிமல்லிகை 2. கடதாசிப் பூ
    3. கொன்னறப்பூ
03. மதியவேளை பொலித்தீன் பையால் கட்டப்பட்டுக் கொண்டுவரப்பட்ட காய்கறிப் பையினுள் நீர்த்துளிகள் காணப்பட்டது. எனின், நீர்த்துளிகள் ஏற்பட்ட விதம்;
    1. ஆவியாதல் 2. ஆவியுயிர்ப்பு 3. கசிவு
04. 
    அருகிலுள்ள நட்சத்திரக் கோலத்தைக் குறிக்கும் பெயர்;
    1. ஓராயன்
    2. கலப்பை
    3. சிறுகரடி
05. 
    அருகில் உள்ள வீதிச் சமிக்ஞை மூலம் விளக்கப்படுவது;
    1. முன்னோக்கிச் செல்க
    2. முன்னோக்கிச் செல்லத்தடை
    3. வாகனங்கள் நிறுத்தத்தடை
06. சமையலுக்குப் பயன்படும் எண்ணெய் ஒன்றை பெறப் பயன்படும் தாவரம்;
    1. கற்றாளை 2. கித்துல்
    3. சூரியகாந்தி
07. காந்தமொன்றைக் கட்டித் தொங்கவிடும்போது அது ஓய்வை அடைந்ததும் காட்டி நிற்கும் திசைகள்;
    1. வடக்கு, கிழக்கு 2. வடக்கு, தெற்கு
    3. வடக்கு, மேற்கு
08. பூச்சிபீடைகளை விரட்டக்கூடிய தாவரம்;
    1. கறிவேப்பிலை 2. துளசி இலை
    3. பருத்தி இலை
09. தீப்புண்களைக் குணப்படுத்தக்கூடிய தாவரம் பின்வருவனவற்றுள் எது?
    1. வேம்பு 2. கற்றாளை 3. குறிஞ்சா
10. எதிரிகள் துரத்திச் செல்லும்போது தப்பிச்செல்ல துர்மணத்தை வெளியிடும் பிராணி;
    1. முயல் 2. நரி 3. ஆந்தை
11. 
    இக்காலிற்குரிய விலங்கு எது?
    1. புலி 2. நரி
    3. குரங்கு

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரலில் மறைந்திருக்கும் கத்தி

கடைக்குச் சென்று ஆப்பிள் பழம் ஒன்றை வாங்கிவிட்டோம். உடனே அதனை உண்ணவும் வேண்டும். இருப்பது இரண்டு பேர். கத்தியும் இல்லை. இப்போது எவ்வாறு ஆப்பிள் பழத்தை வெட்டி உண்ணலாம்?



* முதலில் ஆப்பிள் பழத்தை நன்றாகக் கழுவிக் கொள்ளுங்கள். பழத்தின் மேலுள்ள மெழுகை கையினால் சுரண்டி எடுங்கள்.



* உங்கள் கையையே கத்தியாக மாற்றும் வித்தை இதோ.....



* இவ்வாறு உங்களது விரலை வைத்துக் கொள்ளுங்கள்.



* இப்போது மறு கையை மடக்கி பழத்தின்மீது வைத்துள்ள விரலின் மீது தட்டுங்கள்



* சிறிது நேரம் அழுத்தித் தட்டிக்கொண்டே இருந்தீர்களானால், ஆப்பிள் பழத்தில் விரிசல் ஏற்படும்.



* இதோ... பழம் துண்டாகி விட்டது.

இதுவே, கத்தியின்றி ஆப்பிள் பழத்தைத் துண்டாக்கும் விதம்.

# ஐஸ் உருகி நிரம்பி வழியுமா?

விளிம்பு வரை வெதுவெதுப்பான நீரால் நிரப்பப்பட்ட ஒரு கண்ணாடிக் குவளையில் ஐஸ்கட்டி ஒன்றைப் போட்டால், அது கரைந்து, அந்தக் கண்ணாடிக் குவளையில் நீர் நிரம்பி வழியும் என்றுதான் சாதாரணமாக நினைக்கத் தோன்றும். ஆனால், அவ்வாறு நிகழ்வதில்லை. சரி, என்னதான் நிகழ்கின்றது என்று இந்த பரிசோதனையின் மூலம் பார்ப்போம்.

**தேவையான பொருட்கள்:**


* *1* கண்ணாடிக் குவளை
* வெதுவெதுப்பான நீர்
* ஒரு சிறிய ஐஸ்கட்டி

**செய்முறை:**

* கண்ணாடிக் குவளையில் வெதுவெதுப்பான நீரை குவளையின் விளிம்பு வரை நிரப்பவும்.
* ஒரு ஐஸ்கட்டியை எடுத்து நீரின் மேற்பரப்பில் நீரை அலம்பாமல் மெதுவாகப் போடவும்.
* ஐஸ்கட்டி கரையும் வரையில் அவதானிக்கவும்.
* ஐஸ்கட்டி முழுவதுமாகக் கரைந்த பின்னரும் குவளையின் நீர் நிரம்பி வழியாமல் இருப்பதைக் காணலாம்.

**காரணம்:**

நீர் பனிக்கட்டியாக மாறும்போது விரிவடைகின்றது. மீண்டும் நீராக உருகும்போது சுருங்கி பழைய நிலையை அடைகின்றது. எனவே, நாம் ஐஸ்கட்டியாகப் பார்க்கும் உருவம் பெரியதாகத் தோற்றமளித்தாலும் அது நீராக மாறியதும் சிறிய அளவான இடமே தேவைப்படுவதால், நீர் வெளியேறுவதுமில்லை. நிரம்பி வழிவதுமில்லை.



## வெல்லுங்கள்! விஜய் — TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!





பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*28.05.2014* TOP News *கேள்விக்கான விடை:*
தென் அமெரிக்கா

Pen Drive *வெற்றியாளர்:*
எஸ்.நிலானி,
பழையகாமம்,
முரசுமோட்டை. பரந்தன்.

**அனுப்பவேண்டிய முகவரி:**

Pen Drive
(11.06.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

**'TOP News' SMS செயற்படுத்தும் முறை:**




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

**இவ்வார கூப்பன்:**
11.06.2014

விடை: ...............................
பெயர்: ...............................
முகவரி: ...............................
தொ.பே.இல: ...............................
பாடசாலை: ...............................
தரம்: ...............................
...............................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விந்தையான விஞ்ஞான உண்மைகள்

ஐம்புலனறிவு அனைத்து உயிர்களுக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

பறவைகளுக்குப் பார்வைச்சக்தி அதிகம். வானத்தில் வட்டமிடும் பருந்து, தரையில் உள்ள பல்லியைக்கூடப் பார்த்து அதன் மீது பாய்ந்து பற்றும்.





வேட்டையாடும் விலங்குகளுக்குப் பார்வைச்சக்தி குறைவு. ஆனால், மோப்ப உணர்வு மொட்டுகள் சராசரியாக 22 கோடி என்ற அளவில் உள்ளன.

மனிதர்களுக்கு வாசனையை உணரும் மொட்டுகள் 50 லட்சம் வரை உள்ளன. பத்தாயிரம் வெவ்வேறு விதமான வாசனைகளை எம்மால் பிரித்து அறிந்துகொள்ள முடியும்.



உயிர் வாழ்வதற்கு அனைத்து உணர்வுகளும் வேண்டும் என்பதில்லை. செடிகள் வெளியிடும் கரியமில வாயுவை உண்டு வாழும் ஒரு புழு உள்ளது. அதற்கு அந்த ஒரு வாசனையை மட்டுமே அறிந்துகொள்ள முடியும்.



சூரியனின் புறஊதாக் கதிர்களை தேனீக்கள் உணர்கின்றன. சூரியன் இருக்குமிடத்தை வைத்து, தமது கூட்டுக்குத் திரும்பும் திசையை அவை அறிந்து கொள்கின்றன.



ஒவ்வோர் உயிரினமும் தமது உடலிலிருந்து தனித்தனி வாசனையைக் காற்றில் கலக்கிறது. வண்ணத்துப்பூச்சி தனது வாசனையால் பல மைல்களுக்கு அப்பால் உள்ள தனது இணையைக் கவர்கின்றது.



தவளைக்குப் பார்வைத் திறன் குறைவு. அதன் இரை மட்டுமே அதற்குப் புலப்படும்.

# விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5690

வா.அருண், மூதூர், திருகோணமலை.



அங். இல: 5691

ர.அஸ்ரிப், மீராகேனி வீதி, ஏறாவூர்.



அங். இல: 5692

எம்.ஐ.அஸ்ரிப், கும்பலங்க, இப்பாகமுவ.



அங். இல: 5693

அஃப்ரின் அஜ்வட் ரொக், பிரதான வீதி, சாய்ந்தமருது-07.



அங். இல: 5694

சி.சிவானுஜன், பூதவராயர் வீதி, பருத்தித்துறை.



அங். இல: 5695

தே.தார்மிகா, புளியங்குளம் யூனியன் வீதி, நெடுங்கேணி.



அங். இல: 5696

வி.சபிதா, முகத்தான்குளம், செட்டிக்குளம்.



அங். இல: 5697

எஸ்.டில்சாந்தினி, நோனாத்தோட்டம், கந்தப்பளை.

# தெரிந்து கொள்வோம்



- விமானத்தின் கறுப்புப் பெட்டியின் நிறம் என்ன?
  செம்மஞ்சள் நிறம்
- கனினி நகரம் என்றழைக்கப்படும் நகரம் எது?
  சென்பிரான்சிஸ்கோ



- கெசினோ சூதாட்டத்திற்கு புகழ் பெற்ற ஐக்கிய அமெரிக்க நகரம் எது?
  லாஸ்வெகாஸ் நகரம்
- உலகில் எந்த நாட்டு மக்கள் கைத்தொலைபேசியை அதிகளவில் பயன்படுத்துகின்றனர்?
  சீன நாட்டு மக்கள்
- ஆசியாக் கண்டத்தையும் ஐரோப்பாக் கண்டத்தையும் இணைக்கும் பாலம் எங்கே அமைந்துள்ளது?
  துருக்கியில் இப்பாலம் நீரிணைக்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.



- எதியோப்பியாவின் தலைநகரம் எது?
  அடிஸ் அபாபா



- இலங்கையின் மிகவும் நீளமான ஆறு மகாவலி கங்கை. இரண்டாம் இடத்தைப் பெறும் ஆறு எது?
  மல்வத்து ஓயா



- மனித உடலின் மிகப்பெரிய உறுப்பு தோலாகும். இரண்டாவது பெரிய உறுப்பு எது?
  ஈரல்



- ஐ.நா.தலைமைக் காரியாலயம் நியூயோர்க் நகரில் மேன்ஹட்டன் தீவில் அமைந்துள்ளது. எத்தனையாவது மாடியில் ஐ.நா.பொதுச் செயலாளரின் (பான் கீ மூன்) அலுவலகம் அமைந்துள்ளது?
  38 ஆவது மாடியில்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

---

படத்தை இங்கே ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ....................................................

முகவரி: ....................................................

....................................................

பாடசாலை: ....................................................

வகுப்பு: ....................................................

திகதி: ....................................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# இந்தியாவின் 15 ஆவது பிரதமர்

# நரேந்திர மோடி

2014 ஏப்ரல் 7 ஆம் திகதி முதல் மே 12 ஆம் திகதி வரை நடைபெற்ற இந்திய பொதுத்தேர்தலின் முடிவுகளின்படி, அந்நாட்டின் 15 ஆவது பிரதமராக தெரிவான நரேந்திர தாமோதரதாஸ் மோடி மே 26 ஆம் திகதி இந்திய ராஷ்டிரபவனின் திறந்தவெளி அரங்கில் பதவி ஏற்பின்போது சத்தியப்பிரமாணம் செய்தார்.

## இந்தியாவின் பிரதமர்கள்

சுதந்திரத்தின் பின்னர் இந்தியாவில் தெரிவு செய்யப்பட்ட பிரதமர்கள்

### 01 ஜவஹர்லால் நேரு

இந்திய தேசிய காங்கிரஸ்
1947 ஓகஸ்ட் 15 முதல் 1964 மே 27 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 16 வருடங்கள் 286 நாட்கள்
(1889–1964)

### 02 குல்சாரிலால் நந்த

இந்திய தேசிய காங்கிரஸ்
1964 மே 27 முதல் 1964 ஜூன் 9 வரை பதவி வகித்தார்
காலப்பகுதி 13 நாட்கள்
(1898–1998)

### 03 லால்பகதூர் சாஸ்திரி

இந்திய தேசிய காங்கிரஸ்
1964 ஜூன் 9 ஆம் திகதி முதல் 1966 ஜனவரி 11 ஆம் திகதி வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி ஒரு வருடம் 216 நாட்கள்
(1904–1966)

### 02 குல்சாரிலால் நந்த

இந்திய தேசிய காங்கிரஸ்
1966 ஜனவரி 11 முதல் 1966 ஜனவரி 24 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 11 ஆண்டுகள் 59 நாட்கள்
(1898–1998)

### 04 இந்திரா காந்தி

இந்திய தேசிய காங்கிரஸ்
1966 ஜனவரி 24 ஆம் திகதி முதல் 1977 மார்ச் 24 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 11 ஆண்டுகள் 59 நாட்கள்
(1917–1984)

### 05 மொரஸ்ஜி தேசாய்

மக்கள் கட்சி
1977 மார்ச் 24 முதல் 1979 ஜூலை 28 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 2 ஆண்டுகள் 126 நாட்கள்
(1896–1995)

### 06 சரண்சிங்

மக்கள் கட்சி
1979 ஜூலை 28 முதல் 1980 ஜனவரி 14 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 170 நாட்கள்
(1902–1987)

### 04 இந்திரா காந்தி

இந்திய தேசிய காங்கிரஸ்
1980 ஜனவரி 14 முதல் 1984 ஒக்டோபர் 31 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 4 ஆண்டுகள் 291 நாட்கள்
(1917–1984)

### 07 ரஜீவ் காந்தி

இந்திய தேசிய காங்கிரஸ்
1984 ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் 1989 டிசம்பர் 2 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 5 ஆண்டுகள் 32 நாட்கள்
(1944–1991)

### 08 வி.பி.சிங்

ஜனதா தளம் கட்சி
1989 டிசம்பர் 2 முதல் 1990 நொவம்பர் 10 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 343 நாட்கள்
(1931–2008)

### 09 சந்திரசேகர்

சமாஜ்வாதி மக்கள் கட்சி
1990 நொவெம்பர் 10 ஆம் திகதி முதல் 1991 ஜூன் 21 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 223 நாட்கள்
(1927–2007)

### 10 நரசிம்மராவ்

இந்திய தேசிய காங்கிரஸ்
1991 ஜூன் 21 ஆம் திகதி முதல் 1996 மே 16 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 4 ஆண்டுகள் 330 நாட்கள்
(1921–2004)

### 11 அடல் பிஹாரி வாஜ்பாய்

பாரதிய ஜனதா கட்சி
1996 மே 16 முதல் 1996 ஜூன் 1 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 16 நாட்கள்
(1924 - )

### 12 தேவ் கவுடா

1996 ஜூன் 1 ஆம் திகதி முதல் 1997 ஏப்ரல் 21 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 324 நாட்கள்
(1933 - )

### 13 ஐ.கே.குஜ்ரால்

இந்திய தேசிய காங்கிரஸ்
1997 ஏப்ரல் 21 முதல் 1998 மார்ச் 19 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 332 நாட்கள்
(1919–2012)

### 11 அடல் பிஹாரி வாஜ்பாய்

பாரதிய ஜனதா கட்சி
1998 மார்ச் 19 முதல் 2004 மே 22 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 6 ஆண்டுகள் 64 நாட்கள்
(1924 - )

### 14 மன்மோகன் சிங்

இந்திய தேசிய காங்கிரஸ்
2004 மே 22 முதல் 2014 மே 26 வரை பதவி வகித்தார்.
காலப்பகுதி 10 ஆண்டுகள் 4 நாட்கள்
(1932 - )

## 2012
பெப்ரவரியில் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் 2002 இல் நடைபெற்ற குஜராத் கலவரத்திற்கும் மோடிக்கும் சம்பந்தம் இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.


ஆதரவானவர் என்று கூறப்படுகின்றது.

## 2012
ஒக்டோபர் மாதம் பிரித்தானியாவினால் மோடிக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது.


பிரித்தானிய வர்த்தக மாநாடு ஒன்று குஜராத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

## 2012
டிசம்பர் 10 ஆம் திகதி குஜராத்தின் முதலமைச்சராக நான்காவது தடவையும் வெற்றி பெற்று தெரிவானார்.

இந்த தேர்தலில் முப்பரிமாண 'ஹோலோகிராம் எதிவை' தொழில்நுட்பத்தினூடாக மோடி ஒரே நேரத்தில் பல இடங்களில் உள்ள மக்களுடன் உரையாடினார்.



## 2013
ஜனவரி மாதத்தில் மோடிக்கான ஐரோப்பா சங்கத்தின் தடையும் நீக்கப்பட்டது.

பி.ஜே.பி. யின் தேர்தல் சின்னம்


## 2013
ஜூன் 9 ஆம் திகதி பி.ஜே.பி கட்சியின் தேர்தல் தலைவராக மோடி தெரிவானார்.

2014 தேர்தலின் பிரதமர் வேட்பாளராகவும் தெரிவானார்.

## 2014
ஏப்ரல் 7 முதல் மே 12 வரை நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று 15 ஆவது பிரதமரானார்.

பாரதீய ஜனதாக் கட்சி 543 மொத்த பாராளுமன்ற ஆசனங்களில் 282 இல் வெற்றி பெற்றுக்கொண்டது.

## 2008
மேற்கு வங்காளத்தின் விவசாயிகளின் எதிர்ப்புக் காரணமாக அங்கிருந்த 'டாட்டா நெனோ' மோட்டார் வாக தொழிற்சாலை குஜராத்திற்கு நகர்த்தப்பட்டது.

## 2002
குஜராத்தின் கோதிராவில் ரயிலில் இந்து பக்தர்கள் 59 பேர் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் முஸ்லிம் மக்கள் சம்ஹாரம் செய்யப்பட்டனர். இதில் 1500 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.



குற்றச்சாட்டு முதலமைச்சர் மோடி மீது சுமத்தப்பட்டது.



## 2005
இந்த மோதல் காரணமாக அமெரிக்கா இவருக்கு நுழைவு விசா வழங்க மறுத்துவிட்டது.

## 2001
குஜராத்தில் ஏற்பட்ட பூகம்பத்தில் ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதன் பின்னர் அன்று அங்கு முதலமைச்சராக இருந்த கேஷுபாயி பட்டேல் பதவியை இராஜினாமா செய்தார். வெற்றிடமான இடத்திற்கு மோடி தெரிவானார்.


13 ஆண்டுகள் வகித்த முதலமைச்சர் பதவியில் இருந்து 2014 மே 21 ஆம் திகதி விலகினார்.



## 1987
பாரதீய ஜனதாக் கட்சியுடன் (பி.ஜே.பி) இணைந்து கொண்டார். இந்து தேசியவாதம் குறித்த கருத்துக்களை இந்தியா எங்கும் பரப்பினார்.

ஓராண்டில் குஜராத் கட்சியின் பொது செயலாளரானார். 1995 இல் பாரதீய ஜனதாக் கட்சியின் வெற்றியின் பின்னர் பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய செயலாளர் பதவியைப் பெற்றுக் கொண்டார்.


RSS (Rashtriya swayamsevaksange) உடன் இணைந்து சமூக கலாசாரப் பணிகளில் ஈடுபட்டார்.

## 1960-75
இந்திய-பாகிஸ்தான் யுத்தத்தின்போது தொண்டர் படைவீரராக ரயில் நிலையப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டார். அகில இலங்கை மாணவர் அமைப்புடன் (ABVP-Akhil Bhavatiya Vidyarthi Parishad) இணைந்து கொண்டார்.

## 1950
செப்டெம்பர் 17 ஆம் திகதி வடக்கு குஜராத்தின் மெக்சானா மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வத்நைரில் மோடி பிறந்தார்.





குடும்பத்தின் மூன்றாவது பிள்ளையான மோடி பாடசாலைக்கல்வியை நிறைவு செய்ததன் பின்னர் தந்தையாரின் தேநீர் கடையில் தொழில் செய்தார்.

15








நரேந்திர மோடி, தனது சத்தியப்பிரமாண நிகழ்வில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு மரியாதை செலுத்தும்போது (மேலே), சத்தியப்பிரமாண கடிதத்தில் கைச்சாத்திடும் போது (கீழே)


பதவிப்பிரமாண நிகழ்வில் கலந்து கொண்ட இலங்கை ஜனாதிபதி மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 9 ஆம், 10 ஆம் ஆண்டு மற்றும் க

# இடம்பெ இராசத



பல ஆண்டுகளாக நிலைத்திருந்த பொலன்னறுவை இராசதானி விழ்ச்சியடைவதற்குப் பல காரணங்கள் இருந்தன. பலவீனமான ஆட்சியாளர்கள், பொருளாதார சீர்குலைவு, தொற்று நோய்கள் பரவியமை என்பன அவற்றில் சிலவாகும். கலிங்க மாகனின் படையெடுப்பு பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கு உடனடிக் காரணியாக அமைந்தது. இதன் பின்னர் பல்வேறு நகரங்களை மையமாகக் கொண்டு இராசதானிகள் தோன்றின. இவற்றில் பல தென்மேற்குப் பகுதிகளில் அமைந்தன. இதுவே இராசதானிகள் தென்மேற்கு நோக்கி இடம்பெயர்தமை என அழைக்கப்பட்டது.

### பாதுகாப்புத் தேடுதல்

மாகனின் ஆட்சியில் துன்புற்ற செல்வந்தப் பிரதானிகள், இளவரசர்கள் ஆகியோர் மாயரட்டை, ருகுணு ஆகிய இடங்களுக்குச் சென்று வாழலாயினர்.

### பாதுகாப்பான இடங்களில் நகரங்கள் தோன்றியமை

தலைவர்களில் சிலர் தமது பாதுகாப்பின் பொருட்டு காடு, மலைகள் உள்ள பிரதேசங்களில் தமது நகரை நிறுவினர். அந்த நகர்களிலிருந்து சூழவுள்ள பிரதேசங்களை நிர்வகித்தனர். யாப்பகுவ சுப சேனாதிபதி, கோவிந்த மலை புவனேகபாகு ஆதிபாதி, மினிப்பே சங்க சேனாதிபதி ஆகியோர் இவர்களில் சிலராவர்.

### மாகனுக்கு எதிரான அரச வம்சம்

கலிங்க மாகனின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராகப் புதிய அரச வம்சங்கள் தோன்றின. அது தம்பதெனிய அரச வம்சமாகும். அதன் முதலாவது ஆட்சியாளன் 3 ஆம் விஜயபாகு ஆவான்.

### தம்பதெனிய இராசதானி

3 ஆம் விஜயபாகு இதன் ஆரம்ப ஆட்சியாளனாகத் திகழ்ந்தான். தம்பதெனியாவைச் சூழ்ந்த பிரதேசம் மலைப்பாங்கான இயற்கையான பாதுகாப்பைக்கொண்ட பிரதேசமாக இருந்தது.

### மூன்றாம் விஜயபாகு அரசு கட்டியேறுதல்

மூன்றாம் விஜயபாகு கி.பி 1232 ஆம் ஆண்டு தம்பதெனியாவைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி பீடமேறினான். அதற்கு முன்னர் அவன் பிரதேச ஆட்சியாளனாக திகழ்ந்தான்.



### மூன்றாம் விஜயபாகுவின் பின்னணி

பழைய அரச வம்சத்தில் தோன்றியவன். வனாந்தரமான பிரதேசத்தில் ஆட்சியை அமைத்த தலைவனாவான். அதனால், வன்னிராஜா, வன்னி விஜயபாகு என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றான்.

### மாயரட்டையின் ஆட்சியைக் கைப்பற்றல்

வனாந்தரப் பிரதேசங்களில் ஆட்சி செய்த தலைவர்களைத் தன் வசப்படுத்தி மாயரட்டைக்கு 3 ஆம் விஜயபாகு வந்தான். மாகனின் படையைப் பொலன்னறுவைக்குத் துரத்திவிட்டுத் தம்பதெனியாவில் தனது ஆட்சியை நிறுவினான்.

### மூன்றாம் விஜயபாகுவின் சேவைகள்

பெலிகலையில் புதிய தலதா மாளிகையை நிறுவினான். வத்தளையில் விஜயபாகு விகாரையை அமைத்தான். தம்பதெனியாவில் விஜயசுந்தரராமையை நிறுவினான். களனி விகாரையைப் புனர்நிர்மாணம் செய்தான்.

### புதிய தலதா மாளிகையை பெலிகலையில் அமைத்தல்

கலிங்க மாகன் பொலன்னறுவையை ஆக்கிரமித்தபோது தந்த தாதுவைப் பாதுகாக்கும் பொருட்டு அதனைப் பிக்குமார் கொத்மலைக்குக் கொண்டு வந்தனர். 3 ஆம் விஜயபாகு மன்னன் புதிய தலதா மாளிகை ஒன்றினை அமைத்துத் தந்த தாதுவை வெலிகலைக்குக் கொண்டு வந்தான்.

### ஆட்சி உறுதிப்படுத்தப்படல்

தந்த தாது மன்னனிடம் இருந்ததால் அவனது அரச பதவி உறுதிப்படுத்தப்பட்டது. அவ்வாறே, மக்கள், பிரபுக்கள் மற்றும் பிக்குமார்களின் ஒத்துழைப்பும் மன்னனுக்குக் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**... க.பொ.த.(சா.தர) பாடப் பரப்பிற்குட்பட்டது**

### வத்தளை விஜயபாகு விகாரையை நிறுவுதல்

3 ஆம் விஜயபாகு புத்தசாசனத்திற்குப் பணியாற்றிய ஆட்சியாளன் ஆவான். அவன் வத்தளையில் விகாரை ஒன்றினை அமைத்து, அதற்குத் தனது பெயரையும் சூட்டினான்.

### தம்பதெனிய விஜயசுந்தராராமை விகாரையை நிறுவியமை

வயது முதிர்ந்த காலத்தில் அரசனானான விஜயபாகு




தம்பதெனியவில் விஜயசுந்தராராமையை நிறு[illegible]னான்.

### களனி விகாரையைப் புனரமைத்தல்

மாகனின் செயல்களால் பிக்குமார் துன்பத்துக்கு உள்ளாகினர். பௌத்த சமயமும் வீழ்ச்சி அடைந்தது. மாகன் விகாரைகளை அழித்தமையே அதற்கான காரணமாகும். விஜயபாகு மன்னனானதும் களனி சைத்தியத்தையும் கட்டடங்களையும் புனர்நிர்மாணம் செய்தான்.

### மூன்றாம் விஜயபாகுவின் மரணம்

மூன்றாம் விஜயபாகு மரணமடைந்ததும் இறுதிக் கிரியைகள் அத்தனகல பிரதேசத்தில் நடைபெற்றது. நினைவுச்சின்னமாக அப்பிரதேசத்தில் தூபி ஒன்றும் கட்டப்பட்டது.

### இரண்டாம் பராக்கிரமபாகு

3 ஆம் விஜயபாகுவின் மரணத்தின் பின்னர் அவனது மூத்த மகன் இரண்டாம் பராக்கிரமபாகு என்ற பெயரில் அரசனானான். இவனும் தம்பதெனியாவைத் தலைநகராகக் கொண்டே ஆட்சி செலுத்தினான். இக்காலகட்டத்தில் இராசரட்டை கலிங்க மாகனால் ஆட்சி செய்யப்பட்டது.

### பகைவரின் ஆக்கிரமிப்பு

2 ஆம் பராக்கிரமபாகுவின் 11 ஆவது வருட ஆட்சியின்போது ஆக்கிரமிப்பு ஒன்றிற்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கி.பி 1247 ஆம் ஆண்டில் மலாய தீபகற்பத்திலிருந்து வந்த சந்திரபானுவின் ஆக்கிரமிப்பே அதுவாகும்.

### வீரபாகு போர் செய்தல்

2 ஆம் பராக்கிரபாகு மன்னனின் மருமகனான வீரபாகு இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக மன்னனுக்குப் பதிலாகப் போர் புரிந்தான்.

### சந்திரபானு தோல்வியுறல்

இந்தப் போரில் சந்திரபானு சிங்களப் படையினரால் தோற்கடிக்கப்பட்டான்.

### சந்திரபானு மீண்டும் வருதல்

முதலாவது ஆக்கிரமிப்பின் 14 வருடங்களின் பின்னர் சந்திரபானு மீண்டும்




மாயரட்டையை ஆக்கிரமித்தான். அவ்வேளையில் 2 ஆம் பராக்கிரமபாகு பாண்டிய மன்னனின் உதவியைப் பெற்றுக்கொண்டான். கி.பி 1261 இல் சந்திரபானு கொல்லப்பட்டான்.

### மாகன் தோற்கடிக்கப்படல்

பாண்டியப் படைகளுடன் இணைந்து பராக்கிரமபாகுவின் படைகள் மேற்குப் புறமாகவும் கிழக்குப் புறமாகவும் புலத்திசபுரவைச் சுற்றி வளைத்தன. இரு பிரிவினருக்குமிடையிலான கடும் போரில் பராக்கிரமபாகுவின் படையினர் வெற்றியீட்டினர். கி.பி 1255 ஆம் ஆண்டு இவ்வாறு கலிங்க மாகன் தோற்கடிக்கப்பட்டான்.

### பண்டித இரத்தினம்

இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் மொழி தொடர்பாக சிறந்த அறிவுடையவனாக இருந்தான். இதனால், அவன் 'கலிகாலிக சாகித்ய சர்வஞ்ஞ பண்டிதன்' என்ற பெயரைப் பெற்றான். இலக்கியத்துக்கு அவன் மகத்தான பணிகளையாற்றினான். இவனால் பல நூல்கள் எழுதப்பட்டன. 'கவி சிலுமின' என்ற நூல் இம்மன்னனால் எழுதப்பட்டதாகும். புத்தகோசரால் எழுதப்பட்ட 'விசுத்தி மார்க்கய' என்பதற்குரிய விளக்கவுரையாகப் பராக்கிரமபாகு மன்னனால் 'விசுத்தி மார்க்க சன்னய' எனும் நூல் எழுதப்பட்டது. இவ்வாறே, தம்பதெனிய காலத்துக்குரிய பாளி மொழி நூல்களும் பலவுள.




### தம்பதெனிய காலத்தில் எழுதப்பட்ட நூல்கள்

தம்பதெனிய காலத்தில் பல இலக்கிய நூல்கள் எழுதப்பட்டன. சத்தர்ம ரத்னாவலிய, ஜினசரித்த என்ற பாளி இலக்கியம் என்பனவும் இக்காலத்தில் எழுதப்பட்டன. பௌத்த பிக்கு ஒருவரால் வைத்திய நூல்கள் பலவும் எழுதப்பட்டன.

### நான்காம் விஜயபாகு மன்னன்

இரண்டாம் பராக்கிரமபாகுவின் இறுதிக் காலத்தில் மன்னன் சுகயீனமடைந்ததால் அவன் அரசைத் தனது மூத்த மகனிடம் ஒப்படைத்தான். மன்னன் இறந்த பின்னர் அவன் நான்காம் விஜயபாகு என்ற பெயரில் தம்பதெனிய அரசனானான். இவன் போசத் விஜயபாகு என்ற பெயராலும் அழைக்கப்பட்டான்.



### சூழ்ச்சி நடைபெறல்

நான்காம் விஜயபாகுவின் காலத்தில் மித்த என்ற சேனாதிபதி இருந்தான். அவன் அரசனாக விரும்பி பணியாள் ஒருவனுக்குப் பணம் கொடுத்து நான்காம் விஜயபாகுவைக் கொலை செய்வித்தான்.

### மித்த அரசு கட்டிலேறுதல்

அரசனின் மரணத்தின் பின்னர் சேனாதிபதி மித்த ஆட்சியைக் கைப்பற்றினான். அவனுக்கு அரச உரிமை இருக்கவில்லை. எனவே, பணம் கொடுத்து படைத் தலைவர்களைத் தன்பக்கம் சேர்த்துக்கொண்டான்.

### படைத் தலைவர்களின் மனத்தளர்வு

மித்த சேனாதிபதியின் செயல்களால் படைத்தலைவர்கள் பலர் மனம் தளர்ந்தனர். அதனால், நான்காம் விஜயபாகு மன்னனின் சகோதரன் மித்த சேனாதிபதியைக் கொலை செய்யத்திட்டமிட்டான்.

### மித்த சேனாதிபதி கொலை செய்யப்படல்

விஜயபாகுவின் சகோதரனான புவனேகபாகு, சேனாதிபதி ஒருவனைக் கொண்டு மித்த சேனாதிபதியைக் கொலை செய்வித்தான். அதன் பின்னர் புவனேகபாகு அரசனானான்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கெப்பட்டிப்பொல பிரதானியின் வேண்டுகோள்

கி.பி 1818 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 26 ஆம் திகதி அன்று கெப்பட்டிப்பொல பிரதானி அதிகாலையிலேயே நித்திரைவிட்டு எழுந்து குளித்தார். அதன்பின்னர் எவ்வித பதட்டமும் இன்றி சிரச் சேதம் செய்யும் இடத்திற்கு செல்வதற்கு ஆயத்தமானார். சிறைச்சாலைப் பணியாளர்களுக்கோ இது பெரும் புதுமையாக இருந்தது. அவரைப் போல் மரணத்தை துணிவோடு எதிர்கொள்ளத் தயாராக இருந்த ஒருவரை இதற்கு முன்னால் ஒருபோதும் அவர்கள் கண்டதில்லை. அவர் சிரச்சேதம் செய்யப்படுவதற்கு முன் வழிபாட்டில் ஈடுபட அனுமதி கேட்டார். அவ்வாறே, அவருக்கு அனுமதியும் வழங்கப்பட்டது. கெப்பட்டிப்பொல பிரதானி உரத்த குரலில் பௌத்த வழிபாட்டில் ஈடுபட்டார். இவ்வுலகில் இருந்து விடைபெறும் நான் உன்னதமான தம்பதிவ இமாலய அடிவாரத்தில் ஞான ஒளி பெற்ற புத்தரின் மறைப் போதனைகளை மீண்டும் கேட்பதற்காக திரும்பவும் இவ்வுலகில் பிறப்பதற்கான அதிர்ஷ்டம் கிட்டவேண்டும் என பிரார்த்தனை செய்துகொண்டார். அதன்பின் அவர் பிரதானிமார் அணியும் அந்த விசேட உடையைக் கழற்றி நன்றாக மடித்தார்.

எனக்கிருக்கும் ஒரே ஒரு சொத்து இது மாத்திரமே. இதனை உமக்கே கையளிக்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளுங்கள் என கௌதம புத்தரை நோக்கி வேண்டினார். இதேவேளை, கெப்பட்டிப்பொலயின் மற்றொரு நண்பர் அவரைப் பார்ப்பதற்காக தலதா மாளிகைப் பக்கம் வந்தார். அவர்தான் பதுளை முகவராக கடமையாற்றும் சைமன் சோயர்ஸ் அவர்கள். இவர் கெப்பட்டிப்பொலயின் நெருங்கிய நண்பர். கெப்பட்டிப்பொல பிரதானி அவரை அழைத்தார்.

உங்களுக்கு பெரியதோர் பரிசு இருக்கின்றது. அதனை எடுத்துக்கொண்டு சிரச்சேதம் செய்யும் இடத்திற்கு வரும்படி கூறினார். ஆனால், சைமன் சோயர்ஸ் அவர்கள் கெப்பிட்டிபொலயின் வேண்டுகோளை கௌரவத்துடன் தவிர்த்துக்கொண்டார். அவர் தனது நண்பரின் மரணத்தைப் பார்க்க விரும்பாததே அதற்குரிய காரணமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஒரே பத்திரிகையின் இருவேறு பதிப்புக்கள்



செய்திப் பத்திரிகையில் பிரதான தலைப்புச் செய்தி மற்றும் அதி முக்கியத்துவம் மிக்க தலைப்புச் செய்தி குறித்தும் கடந்தவாரம் தந்திருந்தோம்.

இனி இந்த வாரம்....

செய்திப் பத்திரிகையின் முதற் பக்கத்தை வடிவமைப்பதற்கான ஆயத்தங்களை செய்கையில், அதனுடன் மேலதிகமாக உட்புறத்தில் மற்றுமொரு பக்கமும் ஒதுக்கப்பட்டிருக்கும் முதலாவது பக்கத்தில் செய்திகளின் ஒருசில வரிகளை இடம் பெறச் செய்துவிட்டு அவற்றின் தொடர்ச்சி இந்த மேலதிக பக்கத்தில் இடம் பெறச் செய்யப்படும்.

## இருவேறு பதிப்புக்கள்

செய்திப் பத்திரிகையானது இரண்டு பதிப்புக்களாக பிரசுரிக்கப்படுவதுண்டு. அவை நகரப் பதிப்பு, மாகாணப் பதிப்பு என்று குறிப்பிடப்படும்.

நகரப் பதிப்பினைத் தவிர்ந்த தூர மாகாணங்களிலுள்ள வாசகர்களுக்கு மறுநாள் காலையிலேயே செய்திகள் கிடைக்கச் செய்யவேண்டும் என்பதற்காகவே மாகாணப் பதிப்பு (Provincial Edition) என்ற அடிப்படையில் முன்கூட்டியே கிடைக்கப்பெறுகின்ற செய்திகளை மாலைக்குள் உறுதிசெய்துவிட்டு அவை மாகாணப் பதிப்பாக பிரசுரிக்கப்படும்.

அநேகமாக இரவு 7 மணிக்குள் இந்த மாகாணப் பதிப்பு முடிக்கப்பட்டு உடனடியாக அவை பொதி செய்யப்பட்டு வாகனங்களின் மூலமாகவும், ரெயிலின் மூலமாகவும் உடனேயே வெளி மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். கூடிய தூரத்திற்கு கொண்டு செல்ல வேண்டியிருப்பதனால்தான் இவ்வாறு மகாணப் பதிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

## நகரப் பதிப்பு

அதே தினம் நள்ளிரவு நெருங்கும் நேரத்தில் அதே பத்திரிகையின் நகரப் பதிப்பை பிரசுரிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறும்.

அதாவது முதற்ப் பதிப்பான மாகாணப் பதிப்பு மேற்கொள்ளப் பட்டதன் பின்னர் கிடைக் கப்பெற்ற பிந்திய செய்தி கள் இந்த நகரப் பதிப்பில் பிரசுரிக்க தயார்படுத்தப்படும்.



ஊடக பாடநெறி பாகம்-II

பாடம் 04



அதாவது, ஏற்கனவே மாகாணப் பதிப்பில் இடம்பெற்றிருந்த முதலாவது பக்கத்திலுள்ள சில செய்திகள் உள்புறம் உள்ள தொடர்ச்சிப் பக்கத்திற்கு மாற்றப்படும். வெற்றிடமாகும் அந்த இடத்திற்கு பிந்திக் கிடைத்த செய்திகள் இடம்பெறச் செய்யப்படும். பிந்திய நள்ளிரவு நேரத்தில் இந்த பதிப்பினை மேற்கொண்டாலும் இப்பத்திரிகை நகரப் பகுதிக்குள் மட்டுமே விநியோகிக்கப்படுவதனால், அதிக தூரம் பயணிக்க வேண்டியிருக்காது என்பதனால், இதனை பிந்திப் பிரசுரிப்பதில் எவ்வித பாதிப்பும் இருக்காது.

இதேவேளை, இந்த பிந்திய செய்திகள் வெளி மாகாணத்திற்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட பத்திரிகையில் இடம்பெறவில்லையே அப்படியாயின் வெளிமாகாண வாசகர்களுக்கு பாரபட்சமாக அமையாதா என்ற கேள்வி எழலாம். அப்படியல்ல. அந்த மேலதிக செய்திகள் அதற்கு மறுநாள் அனுப்பப்படும் பத்திரிகையில் இடம்பெறச் செய்யப்படும்.

ஆரம்ப காலங்களில் அச்சுக் கோர்ப்பு முறையிலேயே பத்திரிகைகள் தயாராயின. ஒவ்வொரு எழுத்தாக வார்க்கப்பட்டு அவை கோர்க்கப்பட்டே பந்திகள் அமைக்கப்பட்டன. ஆனால், தற்போதைய நவீன காலத்தில் கணினி மூலம் பக்கவடிவமைப்பு செய்யப்படுவதனால், நேர விரயம் தவிர்க்கப் படுகின்றது. நவீன வசதிகளுடன் கணினியில் பக்கம் வடிவமைப்பது இலகு என்று குறிப்பிட்டாலும் இதிலும் பல நடைமுறை சிரமங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் இருக்கவே செய்கின்றன.

(அடுத்த வாரம் அதனை ஆராய்வோம்...)

ரிஷபன்

# உலகின் மிகப்பெரிய நீச்சல் தடாகம்



தென் அமெரிக்காவின் சிலி நாட்டிலேயே தற்போது உலகின் மிகப்பெரிய நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு சன் அல்ஃபன்சோ டி மார் என பெயரிடப்பட்டுள்ளது. சிலி நாட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்த நீச்சல் தடாகம் 8 ஹெக்டேயர் நிலம் முழுவதும் பரவிக் கட்டப்பட்டுள்ளது.

ஒரு கிலோமீற்றர் நீளமும் 35 மீற்றர் ஆழமும் கொண்ட இந்த தடாகமானது, 250,000 கன மீற்றர் அளவு நீரைக் கொண்டது.

தற்பொழுது உலகிலேயே மிகவும் பெரிய நீச்சல் தடாகம் என கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

உலகிலேயே அளவில் மிகப் பெரிய தடாகம் என்பது மட்டுமல்ல; மிக அழகாக நேர்த்தியாக அமைக்கப்பட்ட தடாகமாக இது திகழ்வதும் ஓர் முக்கிய அம்சமாகும். பெர்ணான்டோ ஃபிஸ்க்மான் (Fernando Fischmann) எனும் வர்த்தகரின் மனதில் தோன்றி அவரே வடிவமைத்து உருவாக்கியது தான் இந்த சாதனைத் தடாகம்.



உலகின் மாபெரும் நீச்சல் தடாகமாகிய இதனைக் கட்டி முடிக்க ஐந்து வருட காலம் எடுத்தது. ஒரு பில்லியன் யூரோ பணம் அல்லது 1.5 அமெரிக்கன் டொலர் இதற்கு செலவானது. அது மட்டுமல்ல; நீச்சல் தடாகமாகிய இதனை சுத்தம் செய்வதற்கும் நல்ல நிலையில் இதனை பேணிக்கொண்டு நடாத்தவும் வருடத்திற்கு இரண்டு மில்லியன் யூரோ நாணயம் செலவாகும் என்றும் இதனை நிர்மாணித்த ஃபிஸ்க்மான் பெருமையுடன் கூறுகின்றார். சாதாரணமாக நீங்கள் காணும் நீச்சல் தடாகத்தை விடவும் இந்த மாபெரும் தடாகம் சுமார் 6,000 மடங்கு பெரியது. அத்தோடு, தெளிவான நீருடன் கூடிய களப்புக்கு அருகில் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் மாலாவுக்கும் தம்பிக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**මාලා:** **මල්ලි, ඔයා උසස් පෙළට මොනවද කරන්න හිතන්නේ?**
மல்லி, ஒயா உசஸ்பெலட்ட மொனவத கறன்ன ஹிதன்னே?
மாலா: **தம்பி, நீ உயர்தரத்திற்கு என்ன செய்ய நினைத்திருக்கின்றாய்?**

**මල්ලි:** **මට මැත්ස් කරන්න හරි ආසයි. ඒත් බයයි.**
மட்ட மெத்ஸ் கறன்ன ஹரி ஆசய். ஏத் பயய்.
தம்பி: **எனக்கு மெத்ஸ் செய்ய விருப்பம். ஆனால் பயம்.**

**මාලා:** **බය වෙන්න එපා මල්ලි. ඔයාට කරන්න පුළුවන්.**
பயவென்ன எப்பா மல்லி. ஒயாட்ட கறன்ன புலுவன்.
மாலா: **பயப்பட வேண்டாம் தம்பி. உங்களால் செய்ய முடியும்.**

**මල්ලි:** **ඔව්, හොඳ ටියුෂන් පන්ති ටිකකුත් හොයන්න ඕනේ.**
ஒவ், ஹொந்த டியுஷன் பந்தி டிக்ககுத் ஹொயன்ன ஓனே.
தம்பி: **ஆம், நல்ல டியுஷன் வகுப்புகளையும் தேடிக்கொள்ள வேண்டும்.**

**මාලා:** **ටියුෂන් කරන්නේ නැතිව විභාගේ පාස් වෙන්න බැහැ.**
டியுஷன் கறன்னே நெதிவ விபாகே பாஸ் வென்ன பெஹெ.
மாலா: **டியுஷன் இல்லாமல் பரீட்சையில் சித்தியடைய முடியாது.**

**මල්ලි:** **අක්කේ, මට හොඳ පන්ති ටිකක් හොයලා දෙන්න.**
அக்கே, மட்ட ஹொந்த பந்தி டிக்கக் ஹொயலா தென்ன.
தம்பி: **அக்கா, எனக்கு நல்ல வகுப்புகள் சிலவற்றைத் தேடித் தாருங்கள்.**

**මාලා:** **හොඳයි මල්ලි. මම ඔයාට හොයලා කියන්නම්.**
ஹொந்தய் மல்லி. மம ஒயாட்ட ஹொயலா கியன்னம்.
மாலா: **நல்லது தம்பி. நான் உங்களுக்குத் தேடித் தருகிறேன்.**

**නැන්දා:** **දුව, තේ බොන්න. පුතා මෙන්න තේ.**
துவ, தே பொன்ன. புதா, மென்ன தே.
மாமி: **மகள், தேநீர் குடியுங்கள். மகன், இதோ தேநீர்.**

**මාලා:** **ස්තූතියි නැන්දේ.**
ஸ்தூதிய் நெந்தே.
மாலா: **நன்றி மாமி.**

**මාලා:** **මම ගිහින් එන්නම් නැන්දේ. අම්මත් ආසාවෙන් ඇති මල්ලිගේ ප්‍රතිඵල දැන ගන්න.**
மம கிஹின் என்னம் நெந்தே. அம்மத் ஆசாவென் எதி மல்லிகே ப்ரதிபல தெனகன்ன.
மாலா: **நான் போய் வருகிறேன் மாமி. தம்பியின் பெறுபேறு பற்றித் தெரிந்துகொள்ள அம்மாவும் ஆவலுடன் இருப்பார்.**

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. எனக்கு மெத்ஸ் செய்ய விருப்பம்.
..........................................................................
ii. நல்ல டியுஷன் வகுப்புகளையும் தேடிக்கொள்ள வேண்டும்.
..........................................................................
iii. நான் போய் வருகிறேன் மாமி.
..........................................................................






**He, She, It** முதலான பிரதிப் பெயர்ச் சொற்களை (Pronouns) எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட, இறந்தகால தனி வாக்கியம் மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் ஆகிய இரண்டு வகை வாக்கியங்களிலும் காணப்படுகின்ற, எதிர்மறை (Negative) நிலையில் உள்ள வாக்கியங்களை இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) அவன் நேற்று இங்கே வரவில்லை.
He did not come here yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஆ) அவன் ஒவ்வொரு நாளும் இங்கே வருவதில்லை.
He does not come here everyday.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| ✱ He did not come.<br>அவன் வரவில்லை. | ✱ He does not come.<br>அவன் வருவதில்லை. |

இ) அவள் நேற்று நூலகத்துக்கு வரவில்லை.
She did not come to the library yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஈ) அவள் தினமும் நூலகத்துக்கு வருவதில்லை.
She does not come to the library daily.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| ✱ She did not come.<br>அவள் வரவில்லை. | ✱ She does not come.<br>அவள் வருவதில்லை. |

உ) அது கடந்த இரவு வீட்டுக்கு வரவில்லை.
It did not come home last night.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஊ) அது ஒவ்வொரு இரவும் வீட்டுக்கு வருவதில்லை.
It does not come home every night.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| ✱ It did not come.<br>அது வரவில்லை. | ✱ It does not come.<br>அது வருவதில்லை. |

✱ **மேலும் சில வாக்கியங்கள் இதோ...**

அ) ரகுஜன் நேற்று மாலை இங்கே வரவில்லை.
Ragujan did not come here yesterday evening.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஆ) ரகுஜன் ஒவ்வொரு மாலையும் இங்கே வருவதில்லை.
Ragujan does not come here every evening.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

இ) சுமதி நேற்று கோவிலுக்கு வரவில்லை.
Sumathi did not come to the temple yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஈ) சுமதி தினமும் கோவிலுக்கு வருவதில்லை.
Sumathi does not come to the temple daily.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

உ) இந்தப் பூனை கடந்த இரவு வீட்டுக்கு வரவில்லை.
This cat did not come home last night.

ஊ) இந்தப் பூனை ஒவ்வொரு இரவும் வீட்டுக்கு வருவதில்லை.
This cat does not come home every night.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



எமது பூமியில் வாழும் மிகப்பெரிய உயிரினம் நீலத் திமிங்கிலம் ஆகும். அதனை பற்றிய சில விசித்திரமான செய்திகளை இங்கே பார்ப்போம்.

* நீலத் திமிங்கிலங்களின் எடை சுமார் 170 டன் வரை இருக்கும். (அதாவது 1,70,000 கிலோகிராம்; 22 யானைகளுக்கு இது சமம்)
* அதனுடைய மிகப்பெரிய இரத்த நாளத்தின் வழியே ஒரு மனிதனால் எளிதாக நீந்திச் செல்லமுடியும்.
* இதன் உணவுப் பழக்கம் மிகவும் வேடிக்கையானது, கண்ணுக்குத் தெரியாத மிக நுண்ணிய உயிரினம்தான் இதன் உணவு, (சிறிய வகை இறால் மற்றும் Zoo Plankton) எனப்படும் நுண் உயிரினம்தான் இதன் உணவாகும்.
* நீலத் திமிங்கிலம் அழியும் தருவாயில் உள்ள ஒரு விலங்கினமாகும்.

மனிதனுக்கும் ஒட்டகச் சிவிங்கிக்கும் ஒரே எண்ணிக்கையில் கழுத்து எலும்புகள் உள்ளது. அதாவது, கழுத்து ஏழு எலும்பால் ஆனது.




# அறிவியல் விநோதம்



Angler Fish எனப்படும் மீன் இனத்தில் உள்ள ஆண் மீன்கள் எப்பொழுதும் பெண் மீன்களின் மேல் ஒட்டியபடியே இருக்கும். ஆண் மீன்கள் பிறந்தவுடனே பெண் மீன்களைக் கண்டுபிடித்து ஒட்டிக்கொள்ளும்; இல்லையேல் அவை உயிர் இழந்துவிடும். இங்குதான் ஆண்டவனின் படைப்பின் அதிசயம் உள்ளது. ஆண் மீன்களுக்கு பெண் மீன்களை அறிந்துகொள்ளும் விதமாக அதன் மூளையில் 'ஆல்பாக்டோரி லோப்' எனும் பகுதி உள்ளது. இதன் மூலம் மிக வேகமாக பெண் மீனை அதன் வாசனையின் மூலமாக உணர்ந்துகொண்டு அதன்மேல் வந்து ஒட்டிக்கொள்ளும். இதன்போது ஆண் மீன்களின் இரத்த நாளங்கள் பெண் மீனின் இரத்த நாளங்களுடன் இணைந்துவிடும். இதன்மூலம் தனக்குத் தேவையான உணவினை பெண் மீனின் இரத்தத்தில் இருந்து எடுத்துக்கொள்ளும்.



Clam எனப்படும் மெல்லுடலி வகையை சார்ந்த சிப்பிகள் பிறக்கும்போது ஆணாகவே பிறக்கும். பெண்ணாக விரும்பும்போது அவை பெண்ணாக மாறிக் கொள்ளும். ஆனால், திரும்பவும் ஆணாக மாற முடியாது.





Roadrunners எனப்படும் பறவை பறப்பதைவிட நடக்கவும் ஓடவும்தான் விரும்புகிறது. இவை ஒரு மணிநேரத்திற்கு 20 முதல் 25 கிலோமீற்றர் தூரம்வரை ஓடும் திறனுடையது.



Capybara தென் அமெரிக்காவில் காணப்படும் இந்த எலிதான் எலி இனத்தின் மிகப் பெரிய உயிரினமாகும். இவை சுமார் நாற்பது கிலோ வரை எடையுள்ளது.

# இவ்வார கார்ட்டூன் படம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்குகளின் செல்லக் குழந்தை 'ராட்சத பென்டா'





பென்டாக்களின் பிறப்பிடம் சீனாவாகும். பென்டாக்கள் எமது கண்ணைக் கவரும் செல்லப்பிராணியாக உள்ளது. பெண் பென்டாவைவிட, ஆண் பென்டாக்கள் பெரியவை. இவற்றின் உடல் வெள்ளை நிறமானவை. இடைக்கிடையே கறுப்புத் திட்டுக்கள் காணப்படும். பனிமலை சார்ந்த இடங்களில் இவை வாழ்கின்றன. இவற்றின் உடல் அடர்த்தியான பஞ்சு போன்ற உரோமத்தால் மூடப்பட்டுள்ளது. இவை தமக்கிடையே தகவல்களைப் பரிமாறிக்கொள்ள ஒலி எழுப்புதல், மணத்தைப் பரப்புதல், சிறு நீரைப் பாய்ச்சல், மரங்களைச் சுரண்டுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. பென்டா குட்டிகள் மூங்கில் மரங்களின் இளங்குருத்தினை மட்டும் உண்ணுகின்றன. சீனாவின் கலாசார சின்னமாக பென்டாக் கரடிகள் கருதப்படுகின்றன.

எம்.பஸாயர் பாத்திமா ஸிப்ரா,
கிரி/கெகுனகொல்ல தேசிய பாட., குருநாகலை

# விசுவ கோபுரம் (The Devil's Tower)






பார்ப்போரை வியப்பில் ஆழ்த்தும் 380 மீற்றர் உயரமான விசுவ கோபுரம் ஐக்கிய அமெரிக்க குடியரசின் முதலாவது தேசிய ஞாபகச் சின்னமாகும். ஏறத்தாழ 50 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வெடித்த எரிமலையின் காரணமாக இந்த விசுவ கோபுரம் தோன்றியதாகக் கருதப்படுகின்றது. புவியுனுள் உருகிய 'போகோல்ப்' எரிமலைக் குழம்பாக நிலத்திலிருந்து மேல் நோக்கிச் செலுத்தப்பட்ட குழாயின், மேல் அந்தமாக இது கருதப்படுகின்றது. அவ்வாறு வெளிவந்த எரிமலைக் குழம்பு படிப்படியாக குளிர்ச்சியடைந்து அறு கோண வடிவக் குறுக்கு வெட்டைக் கொண்ட பல தூண்களாகக் கெட்டியடைந்து, அவை ஒன்று சேர்ந்து இப்பாரிய கற்கோபுரம் தோன்றியதாக வரலாறுகள் கூறுகின்றன.



ஏ.எம்.றினாஸ்,
ஹிஸ்புல்லா வீதி,
காவத்தமுனை.




# ஐம்பூதங்களின் தேடல்

மாணவன் எழுதும் தொடர்கதை-04

கதை, சித்திரம்:
ரா.சஞ்ஜெய்



இடும்பன், "இம்மோதிரம் எனக்கு காற்று வீசும் மையத்துக்கடியில் கிடைத்தது. அப்படியெனில், நிலம், நீர், அக்கினி, ஆகாயம் போன்ற மோதிரங்கள் ஐம்பூதங்களின் மூலசக்தியில் இருந்து அவை ஊற்றெடுக்கும் மையத்துக்கடியில் புதைந்திருக்கும் என்று எண்ணுகிறேன்" என்றான். ஐவரும் "ராட்சதர்களுக்கு மாயவனத்தை மீளக் கொடுக்க வேண்டுமெனில் நாம் மோதிரம் தேடுவதை சிரமேற்கொள்வோம்" என சபதமெடுத்தனர். நிலத்துக்கதிபதியான தனஞ்ஜயன் "பாரிய இந்நிலத்தின் மையப்பகுதியை அடைந்தோமானால் மோதிரங்களை இலகுவாக அடையாளம்" என்றான். தனஞ்ஜயன் எதையும் சரியாக யூகித்துக் கூறுபவன். ஆகையால் அவனது யோசனையை அனைவரும் ஏற்றனர். தனஞ்சயன் அக்கினி மோதிரத்தை தேடிச் சென்றான். அரசர் விருகோதரர் நீர் மோதிரத்தை தேடிச் சென்றார். மகாராணி இடும்பி ஆகாய மோதிரத்தை தேடிச் சென்றாள். கடற்கஜன் நில மோதிரத்தைத் தேடிச் சென்றான். ஐவரும் ஐந்து கம்பளங்களை உருவாக்கி அவரவர் பயணங்களை மேற்கொண்டனர். ஆனால், இடும்பனிடம் ஏற்கனவே மோதிரம் இருந்தது. ஆகையால், அவன் தன் மகனான கடற்கஜனுக்கு துணையாகச் சென்றான். தனஞ்சயன் எரிமலையொன்றின் இடத்திற்குச் சென்று, பாதுகாப்புக் கவசங்களையும் அணிந்து சென்றான்.

## நிலத்துக்கடியிலும் நீருக்கடியிலும்

கடற்கஜனும் இடும்பனும் நிலத்துக்கடியில் மாட்டிக்கொள்ளும் அதேவேளையில், வழி தெரியாமல் மகாராஜா விருகோதரும் நீருக்கடியினில் மாட்டிக்கொண்டார். அவர் இருப்பது நீல ஜலக்கடலுக்கடியிலும் நிலத்துக்கடியிலும் நீருக்கடியிலும் ஆகும். அங்கிருக்கும் இவர்களைக் காப்பாற்ற எவரும் முன்வரவில்லை.

(தொடரும்)

## விளையாட்டுக்களும் அணியில் பங்குபற்றும் வீரர்களும்

| விளையாட்டுக்க்ள் | வீரர்களின் எண்ணிக்கை |
|---|---|
| உதைபந்து | 11 |
| கரப்பந்து | 06 |
| வலைப்பந்து | 07 |
| கூடைப்பந்து | 05 |
| கிரிக்கெட் | 11 |
| ஹொக்கி | 11 |
| எல்லே | 16 |
| றகர் | 15 |
| கிளித்தட்டு | 06 |
| கபடி | 07 |





முஷக்கிர் அஹமட்.

## என் அன்புத் தந்தை



காரிருளில் விளக்கொளி போல்
என் வாழ்க்கையில் ஒளியூட்டிய என் தந்தையே!
நிலத்தில் வியர்வை சிந்தி உழைத்து
உங்கள் பசி பாராது என் பசி தீர்த்தவரே!

பாசத்தின் இலக்கணமும் பாரினில்
போற்றத் தகுந்தவரும் என் தந்தையே!
என் வாழ்வின் ஒளிவிளக்காய்
என்றும் உயர்ந்தவர் என் தந்தையே!

ஆண்டாண்டு காலம் சென்றாலும்
ஆகாது உங்களது பாசத்திற்கு ஈடு
என் அன்புத் தந்தையே!

இல்மா அனீஸ்,
மாஹறை/ஸாஹிரா ம.வித்.,
வெலிபிடிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 18.06.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.


நடராஜ் அறிவுக்கு விருந்து - 28
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

**பரிசுப் பொதி**
1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=

நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

## 3

**? குறி இடப்பட்டுள்ள பகுதிக்கு பொருத்தமான கட்டத்தை குறித்துக் காட்டுக**







## 1

**இரண்டு படங்களுக்குமிடையே உள்ள வித்தியாசங்களை இனங்கண்டு X அடையாளமிடுக**






## 2

**தவளையார் தொலைக்காட்சி உள்ள இடத்தை சென்றடைய வழிகாட்டுங்கள்**



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 89




### மேலிருந்து கீழ்

01. பறவை.
03. மணமக்களை வரவேற்கும்போது இது எடுத்து வாழ்த்துவர்.
04. சாளரம். (தலைகீழ்)
05. தூண்.
07. இதைக் கண்டால் படையும் நடுங்கும்.
08. குழலினும் இனியது இம்மொழி. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்


01. நற்செயல்கள் செய்வதால் கிடைப்பது.
02. முக்கனிகளில் ஒன்று.
03. '....... தொழுவது சாலவும் நன்று'.
04. மோட்சம். (மாறியுள்ளது)
05. சிரம்-ஒத்தகருத்துச் சொல்.
06. கழுதை சுமக்கும்.
07. ஆற்றில் செல்வது.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 88 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தே | சி | க் | 2 கா | ய் | |
| ள் | | | ரி | 3 வா | 4 ச |
| | 5 ப | | ய | | ளி |
| 6 ம | ண் | டோ | த | ரி | |
| ரை | 7 பா | | ரி | 8 ச | 9 கே |
| | டு | ட் | 10 சி | | டு |

## நடராஜ் அறிவுக்கு விருந்து - 26 விடைகள்


போட்டி: 01




போட்டி: 03



போட்டி: 02




## நடராஜ் அறிவுக்கு விருந்து - 26 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**1ஆம் பரிசு**
**பூ.அஜினன், பொகவந்தலாவ.**

**2ஆம் பரிசு**
**எம்.ரியாஸ், மட்டக்களப்பு.**

**3ஆம் பரிசு**
**எம்.எ.அம்ஹர், அக்குரனை.**

**பாராட்டுப் பெறுவோர்:**

- எஸ்.மொஹமட், பானகமுவ.
- எம்.ஆர்.ரீமாஹனி, வெயாங்கொடை.
- பி.புஷ்பகுமார், இரத்தினபுரி.
- ஐ.எம்.பஹாட், மாத்தளை.
- பா.அக்ஷிதா, செங்கலடி.
- பி.ட்ரவின் டிக்சன், கம்பளை.
- எஃப்.பாத்திமா நிஸ்ரின், பொலன்னறுவை.
- எம்.சஜாத், கொட்டாரமுல்ல.
- பாத்திமா அஸ்மத், வெலிமடை.
- தரன்யா சுதாகர், யாழ்ப்பாணம்.

Sponsored by

NATARAJ

Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்கைநெறிகளும் அதன் தமிழ்ப் பெயர்களும்

(கடந்த வார தொடர்ச்சி)

35. Ichthyology- மீனியல்
36. Ideology- கருத்தியல்
37. Information Technology- தகவல் தொழில்நுட்பவியல்
38. Lexicology- சொல்லியல்
39. Linguistic typology- மொழியியற் குறியீட்டியல்
40. Lithology- பாறையுருவியல்
41. Mammology- பாலூட்டியியல்
42. Meteorology- வளிமண்டலவியல்
43. Metrology- அளவியல்
44. Microbiology- நுண்ணுயிரியல்
45. Minerology- கனிமவியல்
46. Morphology- உருவியல்
47 Mycology- காளாம்பியியல்
48. Mineralogy- தாதியியல்
49. Myrmecology- எறும்பியல்
50. Mythology- தொன்மவியல்
51. Nephrology- முகிலியல்
52. Neurology- நரம்பியல்
53. Odontology- பல்லியல்
54. Ontology- உளமையியல்
55. Ophthalmology- விழியியல்
56. Ornithology- பறவையியல்
57. Osteology- என்பியல்
58. Otology- செவியியல்
59. Pathology- நொயியல்
60. Pedology- மண்ணியல்
61. Petrology- பாறையியல்
62. Pharmacology- மருந்தியக்கவியல்
63. Penology- தண்டனையியல்
64. Personality Psychology- ஆளுமை உளவியல்
65. Philology- மொழிவரலாற்றியல்
66. Phonology- ஒலியியல்
67. Psychology- உளவியல்
68. Physiology- உடற்றொழியியல்
69. Radiology- கதிரியல்
70. Seismology- பூகம்பவியல்
71. Semiology- குறியீட்டியல்
72. Sociology- சமூகவியல்
73. Speleology- குகையியல்
74. Sciencology- விஞ்ஞானவியல் (அறிவியல்)
75. Technology- தொழில்நுட்பவியல்
76. Thanatology- இறப்பியல்
77. Theology- இறையியல்
78. Toxicology- நஞ்சியல்
79. Virology- நச்சுநுண்மவியல்
80. Volcanology- எரிமலையியல்
81. Zoology- விலங்கியல்




வறக்காப்பொலை-பனானையைச் சேர்ந்த மகிந்த சந்திரகுமார-விக்னேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வி திலக்ஷிகா நிவேதனி, தனது ஐந்தாவது பிறந்தநாளை 06.06.2014 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



இப்பாகமுவ, கும்பலங்கயைச் சேர்ந்த ஜுபைர்-நபீலா தம்பதியரின் செல்வப் புதல்வி ஸெய்னப், தனது ஐந்தாவது பிறந்தநாளை 05.06.2014 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சீரும், சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றனர்.



எஸ்.லோஜிதன்,
சென்.ஜோசப் கல்., மஸ்கெலியா.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.மெரியன் ஜோன்ஸ்,
லெவண்ட் தோட்டம் கீழ்ப்பிரிவு,
யடியாந்தோட்டை.



எம்.அதீப்,
பதுரியா மத்திய கல்., மாவனல்லை.



எஃப்.ஹஸனா,
சாஹிரா கல்., மாவனல்லை.



ஆர்.சுரேந்திரன்,
கதிரேசன் ம.வித்., நாவலப்பிட்டி.


# உலகின் முதலாவது 'செயற்கை உயிரி'

உலகின் முதலாவது 'செயற்கை உயிரி' என்று வர்ணிக்கப்படுகின்ற



ஒரு பக்ற்றீரியாவை விஞ்ஞானிகள் படைத்துள்ளனர். கணினி ஒன்றைப் பயன்படுத்தி வெறுமனே நான்கு ரசாயனங்களைச் சேர்த்து கட்டமைக்கப்பட்ட டி.என்.ஏ மூலக்கூறால் கட்டுப்படுத்தப்படக் கூடிய ஒற்றை உயிர்க்கல் உயிரி ஒன்றையே விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

''இந்த பக்ற்றீரியாவின் மரபணு பாரம்பரியம் என்பது ஒரு கணினியில்தான் தங்கியுள்ளது. அதற்கமைவாக, செயற்கையாகப் படைக்கப்பட்ட முதல் உயிர் வடிவம் என்றால் அது நிச்சயம் இதுதான்'' என்று கூறுகின்றார், இந்த செயற்கை உயிரியைப் படைத்திருக்கின்ற ஆராய்ச்சிக் குழுவின் தலைவர் டொக்டர் கிரேய்க் வெண்டர் என்பவர்.




ஒரு பக்ற்றீரியாவுக்கான மரபணுக் கட்டமைப்பை கணினி மென்பொருள் துணையுடன் வடிவமைத்து செயற்கையாக ரசாயனங்களைக் கலந்து உருவாக்கி, அதனை ஓர் உயிரணுக்குள் செலுத்தி விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர்.அவ்வாறு செயற்கை மரபணுக் கட்டமைப்பு செலுத்தப்பட்டவுடன் அந்த உயிரிகள்,அந்த செயற்கை மரபணுக் கட்டமைப்புக்கு ஏற்ற வகையில் செற்பட ஆரம்பித்துள்ளன.



அமெரிக்காவில் மேரிலாண்ட் மற்றும் கெலிஃபோர்னியா மாகாணங்களிலிருந்து செயற்படும் ஜே.சி.வி.ஐ என்ற ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த செயற்கை உயிரியை உருவாக்கியுள்ளனர்.இந்தக் கண்டுபிடிப்பு, அறிவியல் முன்னேற்றத்தில் ஒரு மாபெரும் முன்னேற்றம் என்றே வர்ணிக்கப்படுகின்றது.

அதேநேரம் இத்தகைய செயற்கை உயிரினங்களால் உலகம் மிகப் பெரிய ஆபத்துக்களில் சிக்கிவிடலாம் என்றும் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனினும், 'பையோஎன்ஜினியரிங்' என்று சொல்லப்படும் இந்த உயிரியல் தொழில்நுட்பத்தால் ஒரு புதிய தொழில்துறைக்கான கதவுகள் திறந்துள்ளதாகவே விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புகள்

ஐ.வி.யன்னா மற்றும் டொக்டர் ஜோன்
(Ioannis V.Yanna & Dr.John F.Burke)
1979- அமெரிக்கா





செயற்கைத் தோல்

எட்வர்ட் ஸர்ம்
(Eduard K.Zirm)
1905- வியன்னா






கருவிழி மாற்றீடு

ஃப்ரேங்க் வைடில்
(Frank Whittle)
1930- பிரிட்டிஷ்





ஜெட் இயந்திரம்

எல்.என்.தொம்சன்
(L.N.Thompson)
1884 - அமெரிக்கா





ரோலர் கோஸ்டர்

லூசியன் ஸ்மித்
(Lucien Smith)
1867 - அமெரிக்கா





முட்கம்பி

ஸ்மித் சகோதரர்கள்
(Smith Brothers)
1852 - அமெரிக்கா






இருமல் சொட்டு

# நாடுகளும் பணத்தாள்களும்






பஹாமாஸ்

பஹ்மியன் டொலர்
(Bahamian Dollar - BSD)






பஹ்ரைன்

டினார் (Dinar-BHD)






பங்களாதேஷ்

டக்கா (Taka - BDT)






பெல்ஜியம்

யூரோ (Euro-EUR)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெற்றிகரமாக நிறைவடைந்த சர்வதேச மாநாடு





உலக சாரணர் சங்கத் தலைவர் சைமன் ஹென்க் பெர்க் அவர்கள்


சம்மேளன அமைப்பாளர் ஜனப்ரித் பெர்னான்டோ

சாரணர் பிரதம ஆணையாளர் நிமல் டி சில்வா






உலக சாரணர் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் ஸ்கொட் ஏ.டியர்.



இலங்கை சாரணர் வரலாற்றில் நடைபெற்ற சர்வதேச சாரணர் மாநாடு அண்மையில் மிகவும் சிறப்பான முறையில் நிறைவடைந்தது. 8 ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய சாரணர் பிரதானிகள் மாநாடான இந்த சர்வதேச மாநாட்டில் ஐம்பது நாடுகளைச் சேர்ந்த சாரணர் தலைவர்கள் இருநூறு பேர் அளவில் கலந்து கொண்டனர்.

உலக சாரணர் இயக்கத்தின் பணிப்பாளர் நாயகம் ஸ்கொட் ஏ.டியர், உலக சாரணர் குழுவின் தலைவர் சைமன் ஹென்க் டொக்ஈ, ஆசிய பசுபிக் பிராந்திய சாரணர் சங்கத்தின் தலைவர் கலாநிதி சாவோ ஷோபோ ஆகியோர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். 8 ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய சாரணர் பிரதானிகள் மாநாட்டின் பிரதம விருந்தினராக பிரதமர் தி.மு. ஜயரட்ன கலந்து கொண்டு நிகழ்வுகளை சிறப்பித்தார்.

## விஜய் சாரணர் உலகம்

## T.T.L நிகழ்ச்சித்திட்டம்



Ticket To the Life நிகழ்ச்சித்திட்டம் சர்வதேச மட்டத்தில் இடம்பெற்று வருகின்றது. இது குறித்து உலக சாரணர் இயக்கத்தின் உறுப்பினர் சிட் கஸ்த்ரோ பேசுகையில் "சகல நாடுகளிலும் T.T.L நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக, ஏழு நாடுகளில் இந்த நிகழ்ச்சித்திட்டம் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முழுப் பயனையும் தெருச்சிறார்களே பெறுகின்றார்கள். 2013 டிசம்பர் மாதத்தில் 895 தெருச்சிறார்கள் சாரணர்களாகியுள்ளனர். இவர்களுள் 60 சதவீதமானவர்கள் ஆண் பிள்ளைகளாவர். இலங்கையில் அமுலாகும் T.T.L நிகழ்ச்சித்திட்டம் தற்போது இயக்கமற்றுப் போயுள்ளது. மீண்டும் துரிதகதியில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்த முடியும் என்று கருதுகின்றேன். ஏனெனில், T.T.L சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தின் பயனைப் பெறக்கூடிய தெருச்சிறார்கள் ஏராளமானோர் இலங்கையிலும் உள்ளனர்" என்றார்.

# பாராட்டுப் பெற்ற 'விஜய்' சாரணர் பக்கம்


உலக சாரணர் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் ஸ்கொட் ஏ.டியர் அவர்களுக்கு சாரணர் அம்சங்கள் அடங்கிய விஜய், விஜய பத்திரிகைகள் வழங்கப்படுகின்றன.

18 வருடங்களாக இலங்கையின் சாரணர் இயக்கத்தை பிரபல்யப்படுத்துவதில் 'விஜய்' பத்திரிகை ஆற்றும் பங்களிப்பினை உலக சாரணர் இயக்கத்தின் பிரதானி ஜெனரல் ஸ்கொட் ஏ.டியர் பாராட்டியுள்ளார்.

"வெகுஜ ஊடகமான 'விஜய' மாணவர் பத்திரிகை தலைமையிலான 'விஜய' சாரணர் முகாம் ஆற்றிய பணிகள் அளப்பரியனவாகும். இதற்கான எமது மனம் கனிந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் நாம் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழ் மொழியில் பிரசுரமாகும் 'விஜய்' சாரணர் உலகம் பகுதியையும் இங்கு சுட்டிக்காட்ட முடியும். ஒவ்வொரு வாரமும் வெளியாகும் இந்த பத்திரிகைகள் இரண்டும் இலங்கையின் சாரணர் புகழைக் கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ளும் பங்களிப்புக்காக இரு ஆசிரியர் பீடங்களுக்கும் உலக சாரணர் இயக்கத்தின் பணிப்பாளர் என்ற வகையில் நான் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று வாழ்த்துக்களை தெரிவித்தார் ஸ்கொட் ஏ.டியர்.

## 23 ஆவது உலக சாரணர் ஜம்போரி

இன்னும் ஓராண்டில் நடைபெறவுள்ள 23 ஆவது உலக சாரணர் ஜம்போரி தொடர்பிலும் மாநாட்டில் கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பிலான கருத்தினை பிரதி ஜம்போரி தலைவி மாரி நக்கானோ முன்வைத்திருந்தார். 23 ஆவது உலக சாரணர் ஜம்போரி ஜப்பானின் கிரார ஹமாயமகு(ச்)சியில் 2015 ஜூலை 28 முதல் ஒகஸ்ட் வரை நடைபெறவுள்ளது. இதில் 162 நாடுகளைச் சேர்ந்த பத்தாயிரம் சாரணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். நட்பு, அமைதி, சக்தி, நெகிழ்வுத் தன்மை, சகோதரத்துவம் என்பன ஜம்போரியின் தொனிப்பொருளாக உள்ளன. இதுவரை 24,000 சாரணர்கள் 60 நாடுகளில் இருந்து தமது வருகையைப் பதிவு செய்து உறுதிப்படுத்தியுள்ளனர்.

### 31 ஆவது APR ஜம்போரி

மொங்கோலியாவில் நடைபெறும் APR ஜம்போரி தொடர்பாகவும் மாநட்டில் கலந்துரையாடப்பட்டது.






இலங்கை சாரணர் சங்கத் தலைவர் லெஸ்லி ரூபசிங்ஹ பிரதமர் டி.எம். ஜயரத்னவுக்கு கைலாகு கொடுக்கின்றார்.


சம்மேளனத்திற்கு வருகை தந்த சாரணர் தலைவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைக்கோல் வண்டிக்காரர்

## முன்னைய காலத்து நடைமுறைகள்



வைக்கோல் வண்டிக்காரர் அன்று கிராமத்துக்கு வந்துபோன ஒரு முக்கிய நபராவார். அவர் உதவியாளர் ஒருவருடனேயே வண்டியில் வருவார். எமது ஊர்களில் வண்டி எனப்பட்டது இரண்டு மாடுகள் பூட்டிய வண்டியாகும். லொறிகளில் உதவியாளர் ஒருவர் இருப்பது போல் மாட்டு வண்டிகளுக்கும் உதவியாளர் ஒருவர் தேவைப்பட்டார்.

அக்காலத்தில் கிராமங்களிலுள்ள நிலங்கள் இக்காலத்தைப் போன்று சீமெந்து தூண்கள் நாட்டி, கம்பி கட்டப்பட்டு பிரிக்கப்பட்டிருக்கவில்லை. நிலங்களுக்கிடையிலான எல்லைகளும் அரிதாகவே நிர்ணயிக்கப்பட்டிருந்தன. அநேகமான நிலங்களுக்கு எல்லைகள் இருக்கவில்லை. மரங்களை நாட்டியே ஒவ்வொருவரும் தமது நிலத்தின் எல்லையை நிர்ணயித்துக் கொண்டனர். சில இடங்களில் வேலிகளுக்குக் கம்புகள் நாட்டப்பட்டிருந்தன. வைக்கோல் வண்டிக்காரர் பாதையருகிலுள்ள இவ்வாறான இடத்திலேயே தனது வண்டியை நிறுத்தினார். அன்றைய நில உரிமையாளர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. வைக்கோல் வண்டிக்காரரும், உதவியாளரும் வண்டியிலேயே தங்கினர். மாடுகள் இரண்டையும் மரங்களில் கட்டிய பின்னர் வண்டியில் வந்து நித்திரை செய்தனர்.



அவர்கள் சமைக்கும்போது ஏற்படும் விசேடமான மணத்தைக் கிராமத்துப் பிள்ளைகள் விரும்பினர். வளர்ந்தோரும் அந்த உணவைப் பற்றி வர்ணித்தனர். ஆனால், எவருமே அவர்கள் சமைத்த உணவை உண்ண மாட்டார்கள். இவர்கள் நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குக் கிராமத்தில் தங்கி கிராமத்தில் உள்ள வைக்கோலைப் பணம் கொடுத்து வாங்கினர். கிராமங்களில் வைக்கோல் குவித்து வைக்கப்பட்டிருக்கும். வைக்கோல் வண்டிக்காரர் வைக்கோல் குவியலொன்றை ஐந்து ரூபாவிற்கும் குறைந்த விலையிலேயே வாங்கினர். விலைக்கு வாங்கிய வைக்கோலை அங்கிருந்தே சுத்தம் செய்வர். பின்னர் வைக்கோலினாலேயே கயிறு திரிப்பர். அந்தக் கயிற்றைக் கொண்டே வைக்கோல் குவியலைக் கட்டுவர். அதனை அனைவராலும் ரசிக்கக்கூடியதாக இருக்கும். பின்னர் கட்டுக்களை வண்டி இருக்கும் இடத்திற்குக் கொண்டு வருவர். நாள் முழுவதும் அதனை அழகாக அடுக்குவர். இது தொடர்பாக அவர்களுக்கு நல்ல அனுபவம் இருந்தது. மாலையானதும் அவர்களது வேலை முடிவடையும்.

வைக்கோல் வண்டி இருள்படரும் வேளையிலேயே கிராமத்திலிருந்து புறப்படும். வண்டியில் செல்லும் நீண்ட பயணங்கள் இரவிலேயே மேற்கொள்ளப்படும். வைக்கோல் வண்டிக்காரர், வண்டியிலுள்ள பலகையில் அமர்ந்து செல்வார். உதவியாளர் வண்டியின் பிற்பகுதியில் அமர்ந்து செல்வார். எனினும், உதவியாளர் பல சந்தர்ப்பங்களில் வண்டியின் பாதுகாப்புக்காக வண்டியின் பின்னால் நடந்து செல்வார். வண்டியின் பின்பகுதியிலும் இரு பக்கத்திலும் விளக்குகள் எரிவதால், அந்த விளக்கின் மூலம் வைக்கோலுக்கு நெருப்புப் பற்றாமல் இருக்கும்பொருட்டே பாதுகாப்புக்காக அவர் அவ்வாறு செல்வார்.

வண்டிக்காரருக்கு தங்குவதற்கு அன்று இடம் இருந்தது.ஆனால், அவர் அங்கு வைக்கோல் வண்டியை நிறுத்த மாட்டார். அவர் பிரதேசத்தின் தலைநகரை விடியும் போது அடைவார்.வைக்கோலை விற்ற பின்னர் மீண்டும் கிராமத்திற்கு செல்வார். வைக்கோல் விற்பனை செய்யப்படும் பல கடைகள் நகரங்களில் இருந்தன. வைக்கோல் வியாபாரத்தில் அவர்கள் அதிக லாபமடைந்தனர். பிற்காலத்தில் நாட்டிற்கு மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதால் வண்டி பின் நிலைக்குத் தள்ளப்பட்டது. வைக்கோல் வண்டிக்காரரின் வியாபாரமும் முடிவுக்கு வந்தது. அவர் கிராமத்திற்கு வருவதும் நின்றுபோனது.

**இரஞ்சித் ஜெயகர்**

# கணினியின் மூலம் ஓடும் கார்

கணினி மூலம் பயணிக்கும் மோட்டார் கார் ஒன்றை அண்மையில் ஜெர்மனியின் தலைநகர் பெர்லினில் மோட்டார் வாகனப் போக்குவரத்தின்போது ஊடகவியலாளருக்கு செயற்படுத்திக் காட்டப்பட்டது.



இது பெர்லின் நகரின் திறந்த பல்கலைக்கழக ஓட்டோ நோமொஸ் ஆய்வகத்தின் விஞ்ஞானிகளால், தயாரிக்கப்பட்டது. இந்த மோட்டார் காரின் மூலமாக காரை இயக்குவதும் கட்டுப்படுத்துவதும் கணினி மூலம் என்பது மிக முக்கியமான விடயமாகும். காரை இயக்க ஆரம்பித்தல், நிறுத்துதல் என்பன கூடா முப்பரிமாண கெமரா, ஜி.பி.எஸ் கட்டமைப்பு, தூரத்தை அளக்கும் மானி மற்றும் ஏனைய தொடர்பாளர்களின் வழிகாட்டலின்படியே நடைபெறுகின்றது. போக்குவரத்தின்போது சுற்றுப்புறச் சூழல் அனைத்தும் வீடியோ செய்யப்படுகின்றது.

இந்த மோட்டார் வாகனத்தை கணினி மூலம் செலுத்தும்பொழுது சாரதி மற்றும் உதவியாளர் ஒருவர் எல்லாச் சந்தர்ப்பத்திலும் வாகனத்தில் இருக்க வேண்டும். அத்தோடு, வாகனம் பயணிக்கும்போது வாகன நெரிசல் ஏற்பட்டு அச்சந்தர்ப்பத்தில் இயங்கும் கட்டமைப்பு செயலிழந்தால் அதில் தலையிட்டு மீண்டும் வாகனத்தை இயக்குவதற்கு திறமை மிகுந்த ஒருவரும் இருக்க வேண்டும்.


## 'விஜய்' பத்திரிகையை வீட்டிற்கே பெற்றுக்கொள்ள

| | 1 வருடத்திற்கு | 6 மாதங்களுக்கு |
|---|---|---|
| கொழும்பு | ரூ 780/= | ரூ 390/= |
| கொழும்புக்கு வெளியே (தபாலில்) | ரூ 1560/= | ரூ 780/= |

**கட்டணம் செலுத்தும் முறை:**

- நேரடியாக செலுத்த முகவரி:- Subscription Division, Wijeya Newspapers Ltd. No-08, Hunupitiya Cross Rd, Colombo-02
- காசுக்கட்டளை (Money Order):- பெறுபவர் பெயருக்கு Slave island post office என குறிப்பிட்டு குறித்த காசுக்கட்டளை சிட்டையை பதிவுத் தபாலில் அனுப்பவும்.
- காசோலை (check):- Wijeya Newspapers என்ற பெயருக்கு காசோலை எழுதப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய முகவரி: (பதிவுத் தபாலில்) - Subscription Manager, Tamil Vijei No-08, Hunupitiya Cross Rd, Colombo-02,

தொ.பே.இல: - 011-2307789, 0773710291

## வெளிநாட்டிற்கு -Foreign
(1 வருடத்திற்கு)

| Countries | Amount (Sri lankan Rupees) |
|---|---|
| India | 4940.00 |
| Malaysia, Singapore, Oman, Thailand | 5200.00 |
| Saudi Arabia, Kuwait, Bahrain, U.A.E Brunei, Qatar | 5460.00 |
| Australia, Libiya, Malta, Sweden | 6916.00 |
| Britain, Denmark, France, Germany Italy, Netherland, Norway | 8060.00 |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் பிரேஸிலில் ஆரம்பம்





உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் களைகட்டியுள்ளன. இம்முறை பிரேஸில் நாட்டில் ஜூன் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 13 ஆம் திகதி வரை உலகக்கிண்ண கால்பந்துப் போட்டிகள் நடைபெறவுள்ளன. சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. மேற்படி, சம்மேளனம் FEDERATION OF INTERNATIONAL FOOTBALL ASSOCIATION என அழைக்கப்படுகின்றது. இதன் ஆரம்ப எழுத்துக்களின் சுருக்கமாகவே 'FIFA' என்று இவ்வமைப்பு வழக்கில் குறிப்பிடப்படுகின்றது.

இம்முறை நடைபெறுவது 'FIFA 2014' 20 ஆவது கால்பந்துப் போட்டிகளாகும். இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகளின் தகுதித் தேர்வு போட்டிகள் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்று வந்தது. இதற்கான தகுதிச் சுற்றுப்போட்டியின் மூலம் 31 நாடுகள் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்வதற்குத் தகுதி பெற்றுள்ளன. இவற்றுடன் போட்டியை நடத்தும் பிரேஸில் நாட்டையும் சேர்த்து மொத்தமாக 32 நாடுகள் FIFA 2014 கிண்ணத்தை வெற்றிகொள்ளக் களத்தில் இறங்குகின்றன. விதிமுறைகளின்படி போட்டியை நடத்தும் நாடு எவ்வித தகுதிகாண் போட்டிகளிலும் கலந்து கொள்ளாமல் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதியை நேரிடையாகப் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நாடுகளுக்கிடையே மொத்தமாக 64 போட்டிகள் நடைபெறவுள்ளன. இவை அனைத்தும் பிரேஸில் நாட்டின் 12 நகரங்களிலுள்ள விளையாட்டு அரங்கங்களில் நடைபெறுகின்றன. 2010 ஆம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் நெதர்லாந்து அணியை 1-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் அணி வெற்றிகொண்டு செம்பியன் ஆகியமை குறிப்பிடத்தக்கது.

பிரேஸிலில் உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறுவது இது இரண்டாவது தடவையாகும். 1950 ஆம் ஆண்டு போட்டிகள் பிரேஸிலில்தான் நடைபெற்றன. சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கின்ற நாடுகளின் பிரதிநிதிகளின் வாக்கெடுப்பின்மூலமே போட்டியை நடத்தும் நாடு தெரிந்தெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## FIFA 2014 கலந்து கொள்ளும் நாடுகள்

| ஆசியா | வடமத்திய அமெரிக்கா கரீபியன் | ஐரோப்பா | | ஆபிரிக்கா | தென் அமெரிக்கா |
|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | கொஸ்ட்டாரிக்கா | பெல்ஜியம் | கிரேக்கம் | ஆர்ஜன்டீனா | அல்ஜீரியா |
| ஈரான் | ஹொன்டூராஸ் | பொஸ்னியாவும் எர்ஸகோவினாவும் | இத்தாலி | பிரேஸில் | கெமரூன் |
| ஜப்பான் | மெக்ஸிகோ | குரோஷியா | நெதர்லாந்து | சிலி | கானா |
| தென் கொரியா | அமெரிக்கா | இங்கிலாந்து | போர்த்துக்கல் | கொலம்பியா | கோட்டிவார் |
| | | பிரான்ஸ் | ரஷ்யா | ஈக்குவடோர் | நைஜீரியா |
| | | ஜேர்மனி | ஸ்பெயின் | உருகுவே | |
| | | | சுவிட்சர்லாந்து | | |




## உலகக்கிண்ண இலச்சினை

FIFA 2014 போட்டிகளுக்கான இலச்சினையை பிரேஸில் நாட்டைச் சேர்ந்த 'ஆபிரிக்கா' என்ற நிறுவனமே வடிவமைத்துள்ளது. வெற்றிக்கரங்கள் ஒன்றிணைந்து உலகக் கிண்ணத்தை தாங்கிப் பிடிப்பது போல் இந்த இலச்சினை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள மஞ்சள் மற்றும் பச்சை நிறங்கள் உலக நாடுகளை பிரேஸில் வரவேற்பதாக உணர்த்துகின்றது.

2010 ஆம் ஆண்டில் உலகக் கிண்ணப் போட்டிகளின்போது இடம்பெற்ற சிறப்பு நிகழ்வொன்றின்போதே இச்சின்னம் வெளியிடப்பட்டது. பிரேஸிலில் உள்ள 25 நிறுவனங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியின் பின்னரே, இச்சின்னம் தெரிவாகி அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பாதுகாப்பு செலவு

உலகக்கிண்ணப் போட்டிகளை நடத்துகின்ற பிரேஸில் அரசாங்கம் பாதுகாப்பிற்கென கிட்டத்தட்ட பத்தாயிரம் கோடி ரூபாய்க்கும் மேலான பெருமளவு நிதியை செலவு செய்துள்ளது. போட்டிகளைக் கண்டுகளிப்பதற்கென உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் என 5 லட்சத்திற்கும் அதிகமான ரசிகர்கள் வருவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், 1,57,000 பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அதிநவீன ரோந்து வாகனங்கள், விமானங்கள், ஆயுதங்கள், கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்கும் பாதுகாப்புப் படையினருக்கு சிறப்புப் பயிற்சிகளை வழங்குவதற்கும் இப்பணத்தில் பெரும்பகுதி செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட பந்துகள்





உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான பந்துகள் பாகிஸ்தானிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் சீனாவில் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், உரிய வகையில் பணிகள் நடைபெறாததால் பாகிஸ்தானின் 'சியொல்கோட்' என்ற நிறுவனத்திற்கு இந்த வாய்ப்பு கைமாற்றப்பட்டது. இந்நிறுவனம் உதைப்பந்தாட்டப் பந்துகளை ஏற்றுமதி செய்யும் நிறுவனம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, ஜூன் மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 11, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org